பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை 05.12.2017 கதிர் 30

## கடற்றொழிலுக்கு செல்லவேண்டாம்



யாழ்ப்பாணம், டிசெ .05

வடக்கு – கிழக்குக் கரையோரக் கடற்பிரதேசத்தில் இன்று முதல் காற்றின்வேகம் அதிகரிக்கக்கூடும் என்று இடர் பக்கம் 18 »



# பிரபாகரனுக்கே அஞ்சாத நான் இந்த அரசிடமா மண்டியிடுவேன்?



## பதுளை பிரசாரத்தில் மஹிந்த இறுமாப்பு

கொழும்பு, டிசெம்பர் 05

“விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடமே மண்டியிடாத நான் தற்போது ஆட்சியில் உள்ள அரசிடமும் ஒருபோதுமே மண்டி யிடேன்.”

- இவ்வாறு நேற்று இறுமாப்புடன் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. பக்கம் 18 »

## பெப்.17 இற்கு முன்னர் தேர்தல்



கொழும்பு,டிசெ.05

உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடத்தப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற பக்கம் 18 »

## வடக்கில் மருத்துவ வசதிகளை மேலும் மேம்படுத்த வேண்டும்

### சபையில் சிறிதரன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, டிசெ.05

வடக்கில் மருத்துவத் துறையில் நிலவும் குறைபாடுகளை அரசு உடனடியாகச் சீர்செய்யவேண்டும்.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்.

சுகாதார, சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பக்கம் 18 »

## தாவரவியல் பூங்காவாகும் மாவீரர் துயிலும் இல்லம்

### கனகபுரத்தில் பெயர்ப் பலகை நடுகை

கிளிநொச்சி,டிசெ.05

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தாவரவியல் பூங்காவாக அறிவிக்கும் பெயர்ப் பலகை நேற்றுக் கரைச்சிப் பிரதேச சபையினால் நடப்பட்டது.

இந்த வருடம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் துயிலும் இல்லத்தைத் தாவரவியல் பூங்காவாகப் பாதுகாக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அத்துடன் துயிலும் பக்கம் 18 »

## இலங்கை மீனவர்களை மீட்ட ஈரான் கடற்படை

கொழும்பு,டிசெ.05

படகு கவிழ்ந்த நிலையில் இந்தியப் பெருங்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரை ஈரானிய எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்று காப்பாற்றியுள்ளதாக, இர்னா செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

படகு கவிழ்ந்த நிலையில், அதன்மீது ஏறிநின்று பக்கம் 18 »

## முஸ்லிம் நாடாயிருந்தால் விக்கிக்கு தலையிருக்காது

### இது சிங்கள - பௌத்த நாடென்பதால் அவர் தப்பிவிட்டார் என்கிறார் வீரசேகர



கொழும்பு, டிசெ.05

ஒரு முஸ்லிம் நாடொன்றில் வாழும் முல்லாக்களை முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸ்வரன் துன்பப்படுத்தியிருந்தால் அவரது தலை துண்டிக்கப்பட்டு இருக்கும்.

ஆனால் இது ஒரு சிங்கள – பௌத்த நாடு என்பதை விக்னேஸ்வரன் அறிந்துள்ளார். அதனால்தான் அவர் தனது அதிருப்திகளைப் பரவலாக வெளியிட்டு வருகிறார் என முன்னாள் கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர குற்றம் சுமத்தினார்.

இது சிங்கள – பௌத்த நாடல்ல பக்கம் 18 »

## மீனவர்கள் கைதை அடுத்து கடற்படை - மக்கள் முறுகல்

### மன்னாரில் நேற்று மாலை பதற்றம்



மன்னார்,டிசெ.05

மன்னார் தாழ்வுபாட்டுக் கடலில் நேற்றுக் காலை மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் சுமார் 25 பேரைக் கடற்படையினர் கைது செய்தனர். இதனை அடுத்துக் கடற்படையினருக்கும் தாழ்வுபாட்டுக் கிராம மக்களுக்கும் இடையில் நேற்று மாலை முறுகல் நிலை ஏற்பட்டது. பக்கம் 18 »

## வடக்கு - கிழக்கில் இம்முறை அதிக சுயேச்சைக் குழுக்கள்

### ஏற்பாடுகள் மிகத் தீவிரம்

யாழ்ப்பாணம்,டிசெ.05

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பிரதான கட்சிகளைப் புறந்தள்ளி வடக்கு – கிழக்கில் அதிகளவில் சுயாதீனக் குழுக்கள் களமிறங்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்க்கூட்டமைப்பின் பிளவு, நம்பிக்கை தரலாமென எதிர்பார்க்கப்பட்ட தமிழ் தேசியமக்கள் முன்னணி – ஈ.பி.ஆர்.எல்.எவ். பிளவு மற்றும் தேசிய கட்சிகளது ஆதிக்கமென்பவை மக்களிடையே குழப்பங்களைத் தோற்றுவித்துள்ளன.

இந்தக் கட்டத்தில் பல பக்கம் 18 »

## அம்பகமுவ எல்லை தவறு: நேற்று மனு

கொழும்பு, டிசெ.05

அம்பகமுவ பிரதேச சபைக்கான எல்லை நிர்ணயம் தவறு எனக் குறிப்பிட்டு அடிப்படை உரிமை மனு ஒன்று நேற்று உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பகமுவ பிரதேசசபையின் முன்னாள் பக்கம் 18 »

## வறியவர்களுக்கான பட்ஜெட்தான் இது!

### சபையில் மைத்திரி பெருமிதம்



கொழும்பு, டிசெ. 05

நல்லாட்சி அரசு வறிய மக்களின் இதயத் துடிப்பைப் புரிந்துகொண்டு செயற்படும் அரசாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வறிய மக்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் வகையிலேயே அரசு அனைத்துப் பொருளாதாரத் திட்டங்களையும் மேற்கொள்கிறது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் தெரிவித்தார். பக்கம் 18 »

# வரவு – செலவுத் திட்டத்திற்கு ஜனாதிபதி மைத்திரி பாராட்டு!



கொழும்பு, டிசெ. 05

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்றுக் கலந்து கொண்டு ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இம்முறை வரவு- செலவுத் திட்டம் நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கை அடைவதற்கு உந்து சக்தியாக அமையும்.

தற்போதைய அரசு பதவியேற்ற மூன்று ஆண்டுகளில் இலவச சுகாதார சேவையையும், இலவச கல்வியையும் உறுதிப்படுத்த சிறப்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இந்த நாட்டின் இலவச சுதந்திர சேவையையும், இலவச கல்வியையும் உறுதிப்படுத்த முடிந்துள்ளதுடன் வீடுகளைபெற்றுக் கொடுப்பதற்கும் கடந்த 3 ஆண்டுகளில் தற்போதைய அரசு விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஆயிரத்து 200 கோடி ரூபா செலவில் பொலநறுவையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கான வைத்தியசாலை எதிர்வரும் வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும், நாட்டில் சுகாதார சேவையை சர்வதேசம் பாராட்டியிருக்கிறது என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

## புறக்கோட்டை கடை ஒன்றில் தீ!

கொழும்பு, டிசெ. 05

புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள ஆபரண விற்பனை நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட இந்தத் தீ விபத்தைத் தீயணைப்பு படை அதிகாரிகளுடன் சேர்ந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயால் ஏற்பட்ட சேதம் தொடர்பான விவரங்கள் இது வரை கண்டறியப்படவில்லை எனவும் மின்சார ஒழுக்கு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு!







யாழ்ப்பாணம், டிசெ. 05


24 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்படவுள்ள திறந்த நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுக் காலை நட்டுவைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன், யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன், யாழ்ப்பாணம் தொழில் நியாய சபையின் தலைவர் திருமதி தாரணி கணேசானந்தன், அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

# வடக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சான்றிதழில் தமிழ்க் கொலை!

யாழ்ப்பாணம், டிசெ. 05

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சான்றிதழில் தமிழ் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன எனப் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.




வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழான குறித்த திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும், பிரதேச செயலகமும் மற்றும் மாவட்ட கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது விருது வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் தமிழ் எழுத்துப் பிழை காணப் பட்டமை குறித்து கலைஞர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விருதுகளைப் பெற்ற கலைஞர்களுக்கும் விருதுகளில் பெயர் மாறிப் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் அதனால் பலரும் மீண்டும் விருதுகளை கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைத்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இது குறித்து பாதிக்கப்பட்ட கலைஞர் ஒருவர் தெரிவிக்கையில்-

நான் நீண்டகாலமாக கலைஞராக இருக்கின்றேன். என்னை மாவட்ட செயலகத்தால் கௌரவித்து விருது வழங்கப்போவதாக அறி வித்தனர்.

ஆவலுடனும், எதிர்பார்ப்புடனும் வந்தேன். ஆனால் எனக்கு வழங்கப்பட்ட விருதில் எனது பெயர் இல்லை. மாறி பெண் ஒருவரின் பெயருடன்தந்தார்கள். இப்படி பலருக்கும் பெயர் மாறி விருது வழங்கப்பட்டுள்ளது.

எனது விருதை மாவட்ட கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து விட்டு ஏமாற்றத்துடன் வீடு செல்கின்றேன். பின்னர் வீட்டுக்கு விருதைக் கொடுத்து அனுப்புவதாகச் சென்னார்கள். வீட்டில் எதிர்பார்ப்புடன் இருப்பார்கள். என்ன சொல்வது என்று தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

இவ்வாறான விடயங்கள் குறித்து வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-100)

## வானிலை அவதான நிலையத்தின் செயற்பாடுகளை மேம்படுத்தத் திட்டம்!

கொழும்பு, டிசெ. 05

அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலை தொடர்பாக வானிலை அவதான நிலையம் மேற்கொண்டிருந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக நாட்டில் ஏற்படவிருந்த அழிவுகளை குறைத்துக் கொள்ள முடிந்ததாக சபை முதல்வரும் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின்போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த புதன்கிழமை ஏற் படவிருந்த சீரற்ற கால நிலை தொடர்பில் காலநிலை அவதான நிலையம் முன்னரே பொதுமக்களை அறிவுறுத்தி வந்தது.

கடற்றொழிலாளர்களையும், கடற்படையினரையும் அவதானமாக செயற்படுமாறு எச்சரித்திருந்தது. தற்போது வானிலை அவதான நிலையத்திற்கு தேவையான நவீன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதால் காலநிலை மாற்றம் பற்றிய தகவல்களை துல்லியமாக தெரிவிக்க முடிகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஊடகர்களுக்கு எதிரான குற்றங்கள் ஜனநாயகத்திற்கு எதிரானவை!

### பிரதமர் ரணில் கூறுகிறார்

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள், ஜனநாயகத்திற்கு எதிரானவையாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று ஆரம்பமான ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பிரதமர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசு இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்குத் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்றிட்டங்கள் குறித்து இலங்கை பாராட்டுகிறது.

2005, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் 9 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். லசந்த விக்கிரமதுங்க இதில் ஒருவராவார். மேலும் பல ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது

மேலும், கடத்தல் சம்பவங்களும் இந்த காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. கடந்த கால ஆட்சியின்போது, ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதற்கும், மௌனிக்கச் செய்வதற்கும், குரூரமான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சில ஊடகங்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கின என்றும் அவர் தெரிவித்தார்.

(ப)

காலைக்கதிர் Kalaikkathir
செவ்வாய்க்கிழமை 05.12.2017



# வடக்கிற்கு 110 தாதியர்கள் நியமனம்; 108 பேர் பெரும்பான்மை இனத்தவர்



வடமாகாண வைத்தியசாலைகளில் பணியாற்றிய 70 தாதியர்கள் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், மாகாணத்திற்கு வழங்கப்பட்ட 110 தாதியர்களில் 102 தாதியர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் புதிதாக மாகாணத்திற்கு 9 பொது சுகாதார பரிசோதகர்கள் பணியில் இணைக்கப்பட்டு, அவர்களுக்கும் நேற்று நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்கள் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன் ஊடகங்களுக்கு தகவல் தருகையில் –

வடமாகாணத்திலிருந்து வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த 70 தாதியர்களுக்கு அந்த இடமாற்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை வடமாகாண வைத்தியசாலைகளில் பணியாற்ற 110 தாதியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 102 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கியுள்ளேன்.

அதேபோல் புதிதாக 9 பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் நியமன கடிதங்களை வழங்கியிருக்கின்றேன்.

வடமாகாணத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைத் தொகுதியை வைத்திருக்கும் 7 வைத்தியசாலைகள் உள்ளன. அவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் 2 தாதியர்கள் வீதம் பகிர்ந்து கொடுத்துள்ளோம். மேலதிகமாக உள்ள தாதியர்களை தேவை அடிப்படையில் 5 மாவட்டங்களுக்கும் பகிர்ந்து கொடுத்திருக்கின்றோம். – என்றார்.

இதேவேளை வடமாகாணத்திற்கு வழங்கப்பட்ட 110 தாதியர்களில் 108 பேர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என வெளியாகும் தகவல் தொடர்பாக சுகாதார அமைச்சரிடம் கேட்ட போது–

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தாதியர்களே அவர்கள் எனக் கூறியமையுடன், தமிழ் இளைஞர், யுவதிகள் தாதிய உத்தியோகத்திற்கான விண்ணப்பங்களை செய்வதில்லை என்றும் இதனால் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இளைஞர், யுவதிகளே விண்ணப்பங்களை செய்து வட மாகாணத்திற்கும் சேவை செய்ய அனுப்பப்படும் நிலை காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார். (உ)

# கொழும்பு மாநகர சபைக்கே அதிகளவான உறுப்பினர்கள்

கொழும்பு, டிசெ.05

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அதிக உறுப்பினர்கள் தெரிவாவது கொழும்பு மாநகர சபைக்கே எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அத்துடன் அக்கரைப் பற்றுப் பிரதேசசபைக்கு மிகக் குறைவான உறுப்பினர்கள் தெரிவாவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அதற்கமைய கொழும்பு நகரசபைக்கு 113 உறுப்பினர்களும், அக்கறைப் பற்றுப் பிரதேசசபைக்கு 11 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

# சாதாரண தரப் பரீட்சை; சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

கொழும்பு, டிசெ.05

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டி.சனத் பூஜித நேற்றுத் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையின் காரணமாகப் பரீட்சைக்கு எந்தவித தடைகளும் ஏற்படாது எனவும், பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் சேதமடைந்திருந்தால் புதிய அனுமதி அட்டைகள் வழங்கப்படும் எனவும், இன்று நள்ளிரவு முதல் மீட்டல் மற்றும் தனியார் வகுப்புக்கள் அனைத்தும் தடை செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# இளைஞன் மீது நேற்றிரவு கொலைவெறித் தாக்குதல்

## மீசாலையில் பயங்கரம்

யாழ்ப்பாணம், டிசெ. 05

தென்மராட்சி மீசாலைப் பகுதியில் இனந்தெரியாத கும்பல் ஒன்று இளைஞர் ஒருவர் மீது வாள்களால் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பித் துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று இரவு 7:30 மணியளவில் இடம்பெற்றது. வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வடக்கு, கிழக்கில் தொழில் அதிகாரிகள் 24 பேர் நியமனம்

கொழும்பு, டிசெ.05

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு, விரைவில் தமிழ் பேசும் தொழில் அதிகாரிகள் இருபத்து நான்கு பேர் நியமிக்கப்படுவர் என்று தொழில் மற்றும் தொழிற் சங்கத்துறை அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

தொழில் கடமையாற்றும் தகுதி உள்ள அவர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும். அண்மையில் நடத்தப்பட்ட திறந்த பரீட்சையில் அவர்கள் சித்தி அடைந்தனர் என்றும் அமைச்சர் தகவல் வெளியிட்டார்.

கிழக்கில் தொழில் துறைகள் அதிகரித்து உள்ளதால், தொழில் அதிகாரிகளின் தேவை அவசியமாகி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய மூன்று பேர் கைது

கண்டி பொலிஸ் நிலையத்தின் அவசர அழைப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகஸ்தரைத் தாக்கினர் எனக் கூறப்படும் மூன்று பேரை பேராதனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போயா தினமான நேற்று முன்தினம் பொலிஸ் உத்தியோகத்தரை சிலர் தாக்கியதால் அவர் காயமடைந்து பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கண்டி – நாவலப்பிட்டி இடையில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இரண்டு பஸ்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டது. இதில் ஒரு பஸ் மீது அங்குனாவலகுருந்து– வத்தைப் பிரதேசத்தில் போதையில் இருந்த சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அப்போது பஸ்ஸில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அமைதியை நிலைநாட்ட முயற்சித்துள்ளார்.

மதுபோதையில் இருந்தவர்கள் அவரைத் தாக்கியுள்ளனர். இது சம்பந்தமாக விசாரணை நடத்திய பேராதனைப் பொலிஸார் நான்கு பேரைக் கைதுசெய்துள்ளனர்.

# கொழும்பில் ஹெரோய்னுடன் ஒருவர் கைது

புறக்கோட்டை, பெஸ்டியன் பகுதியில் ஹெரோய்ன் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கண்டி, மஹயியாவ பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 5 கிராம் 560 மில்லி கிராம் ஹெரோய்னைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

# யாழ். - கொழும்பு பஸ்கள் பொலிஸாரால் சல்லடை

## பயணிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ .05

யாழ்ப்பாணம் – கொழும்பு சேவையில் ஈடுப்பட்ட பஸ்கள் அனைத்தும் நேற்றிரவு திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

கொழும்பு நோக்கிப் பயணிக்கும் சகல பஸ்களையும் யாழ்ப்பாணம் ஏ–9 வீதியில் செம்மணி யாழ்.வளைவுப் பகுதியில் வழிமறித்த பொலிஸார், பயணிகளின் பயணப்பொதிகள் உட்பட அனைத்தையும் துருவித்துருவி சோதனையில் ஈடுபட்டனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்தே பயணித்தனர்.

யாழ்ப்பாணம் – கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்றில் பெருமளவு கஞ்சா போதைப் பொருள் கடத்தப்படுவதாக இரகசியத் தகவல் கிடைத்தது. அதனை முறியடிக்க பொலிஸார் வீதிச் சோதனையில் அமர்த்தப்பட்டனர். அதனால் ஒவ்வொரு பஸ்ஸும் சோதனைக்குட்படுத்தப்படுகிறது என்று பொலிஸார் கூறினர்.

# தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அரசினால் புதிய நியமனங்களாம்

## நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்துகின்றார்

கொழும்பு, டிசெ.05

அரசாங்கம் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் கொழும்பு துறைமுகத்தினுள் 3000 தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சைகளை நடத்துகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் –

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பணியாற்றிய 438 பேரை பணிநீக்கம் செய்வதற்கு துறைமுக அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளமையை சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாட்டில் தொழிலாளர் சட்டங்கள் மீறப்பட்டுள்ள எனவும் தொழில் அமைச்சின் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதும், அவரின் உத்தரவை மீறி துறைமுக ஊழியர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள போதும் தொழில்வாய்ப்பை வழங்குவதாகக் கூறி நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தேர்தல் சட்டம் மீறப்பட்டுள்ளமை மாத்திரமன்றி தொழில் சட்டத்தையும் மீறியுள்ளனர் என நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தலையிட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

அதேவேளை, அரசாங்கம் இன்றளவில் பொதுமக்களுக்கு பலவிடயங்களைக் காட்டி அச்சுறுத்தலை மேற்கொண்டேனும் தேர்தலை வெற்றிகொள்ள முயற்சிப்பதாக அவர் குற்றம்சுமத்தினார்.

# இலங்கை மீனவர்கள் 17 பேர் மாலைதீவு, இந்தியாவில் கைது

எல்லை கடந்த நிலையில் கடற்றொழிலில் ஈடுபட்ட 17 இலங்கை கடற்றொழிலாளர்கள் இந்தியா மற்றும் மாலைத்தீவு கடற்பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர அவர்களின் 3 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த கடற்தொழிலாளர்கள் இந்தியா மற்றும் மாலைதீவு கடல் பிரதேசங்களில் வைத்து அந்த நாடுகளின் கடற்படையினர் கைது செய்துள்ளனர் எனப் ஊடகசெய்திகள் தெரிவித்துள்ளன.

இலங்கையைச் சேர்ந்த 6 கடற்றொழிலாளர்கள் இந்திய கடற்பரப்பிலும், 11 கடற்றொழிலாளர்கள் மாலைத்தீவு கடற்பரப்பிலும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பயனற்ற கொள்கைக் கோட்பாடு

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போனானாம்" - என்ற கதை மாதிரி இருக்கின்றது தமிழ்க் கூட்டமைப்பைத் தோற்கடிக்கப் போவதாகக் கங்கணம் கட்டி நிற்கும் தரப்புகளின் போக்கு.

அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பு, தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது, தமிழர்களை நட்டாற்றில் விடப்போகின்றது என்றெல்லாம் திரும்பத் திரும்ப எச்சரித்து வந்தவர்கள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியாக இதுவரை இருந்து வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தரப்பினர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்ட தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்திலும் இதையே அடிக்கடி கூறிவந்தனர். 'எழுக தமிழ்!' என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட எழுச்சி நடவடிக்கைக்குப் பின்னால் எதிரொலித்த பிரதான கருத்தியல் நிலைப்பாடு அதுதான்.

கடைசியாக நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தின் பின்னர், மேற்படி இரண்டு கட்சிகளினதும் - ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றினதும் - தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கோடி காட்டியமையும் இந்த விடயத்தைத்தான்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நமது மக்களை நட்டாற்றில் விடப் போகின்றது என்று திரும்பத் திரும்ப எச்சரித்தவர்கள், அதை முறியடிக்கும் கூட்டு முயற்சியை ஆரம்பத்துக்கு முன்னரே நட்டாற்றில் விட்டுவிட்டு நிற்கின்றமை வேடிக்கைக்கும் விசனத்துக்கும் உரியதாகிவிட்டது.

கூட்டமைப்பின் போக்கு பேராபத்து மிகுந்தது என்று திரும்பத் திரும்ப எச்சரித்தவர்கள் - அந்தப் பேராபத்தில் இருந்து தமிழ் மக்களை மீட்டாக வேண்டும் என்று அபாயச் சங்கொலி எழுப்பியவர்கள் - அந்த அபாய மீட்பு நடவடிக்கை விடயத்தையே அற்பமாகக் கருதும் விதத்தில் நடந்துகொள்ள முற்பட்டிருக்கின்றார்கள்.

இந்த விவகாரம் - தமிழர்களின் அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட விடயம் - கொள்கை சார்ந்தது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். அதற்காகக் கொள்கை, கொள்கை என்று கோட்பாட்டைக் கட்டிப்பிடித்துக்கொண்டு நின்று மக்களை நடுவீதியில் விட்டுவிட முடியாது. நீதி, நியாயம், கொள்கை, சரி, தவறு இவற்றுக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் ஓர் இடைவெளியைக் கண்டுபிடித்து, அந்த வழியில் செல்வதுதான் சரியானதாக இருக்கும்.

தமிழ்க் கூட்டமைப்பின் போக்கு சரியில்லை, அது மக்களை ஏமாற்றித் தவறான பாதையில் வழி நடத்துகின்றது என ஈ.பி.ஆர்.எல்.எவ்வும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் திரும்பத் திரும்பக் கூறுவது உண்மையானால் -

அந்தப் பாதையில் இருந்து மக்களை மீட்பதுதான் முதலில் அக்கட்சிகளின் பிரதான பணியாக இருக்க வேண்டும்.

கூட்டமைப்பின் போக்கைக் கொள்கைகள், கோட்பாடுகளின் அடிப்படையில் தவறு என விமர்சிப்போர், அந்தப் பாதையிலிருந்து மக்களை மீட்கும் நடவடிக்கை என்ற அவசர செயற்பாட்டிலாவது ஒரு வழியில் நிற்க லாயக்கற்றவர்கள் என்றால், அவர்களின் கொள்கைகள், கோட்பாடுகள் வெறும் கோடரிக் காம்பன்றி வேறில்லை.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பில் இருந்தபடி கடுமையாகச் சாடி விமர்சித்தவர் - விமர்சித்து வருபவர் - வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இந்த விமர்சன விடயத்தில் அவரோ, சுரேஷ் பிறேமச்சந்திரனோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ வேறுபட்டவர்கள் என்று கூற முடியாது. ஏறத்தாழ மூவரின் கருத்தியல் நிலைப்பாடுகளும் இந்த விமர்சன விவகாரத்தில் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன என்பது தமிழ் வாசகர்களுக்குத் தெரிந்த விடயம்தான்.

ஆனால், கூட்டமைப்புக்கு எதிராகத் தமிழ் மக்கள் பேரவையின் அனுசரணையுடன் புதிய அரசியல் கூட்டமைப்புத் தயார் என்று பேரவையின் கடைசிக் கூட்டத்துக்குப் பின்னர் கஜேந்திரகுமாரும், சுரேஷ் பிறேமச்சந்திரனும் ஊடகங்களுக்கு அறிவித்தனர். ஆனால், அந்த அறிவிப்போடு அந்த விவகாரம் அமுங்கிப் போய்விட்டது.

அந்த விடயத்துக்குத் தாம் உடன்படவேயில்லை, தம்மைக் கலந்தாலோசித்துத் தமது இணக்கம் பெறாமல் எடுக்கப்பட்ட முடிவுக்குத் தாம் உடன்படமாட்டார் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் அடம் பிடித்தமையால், அந்த விவகாரம் அப்படி அமுங்கிப் போயிற்று என்று கூறப்படுகின்றது.

அவ்வாறு, முதலமைச்சர் ஒற்றைக் காலில் நின்றமை தொடர்பில், பேரவையில் நேரடியாகச் சம்பந்தப்பட் பலருக்கும் முதலமைச்சர் மீது கடும் காய்ச்சல்.

முன்னர் முதலமைச்சரை ஆஹா, ஓஹோ என்று - கடவுள் போன்று - போற்றித் துதித்துத் திரிந்தவர்கள், அவரால் நன்மைகள் பல ஈட்டியுள்ளவர்கள், புதிய அரசியல் கூட்டமைப்பு என்ற முயற்சிக்கு அவர் இணங்காதமையால் அவரை இப்போது தூற்றித் திரியவும் தவறவில்லை.

ஆனால், தமிழ்க் கூட்டமைப்புக்கு எதிரான ஓர் அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவதற்கும் கூட இணங்காத - அல்லது அந்த முயற்சிக்கு லாயக்கற்ற - இந்த 'கொள்கைக் கோட்பாட்டாளர்களை' நம்பி முதல்வர் விக்னேஸ்வரன் களத்தில் இறங்காதமையும் நியாயம் போலவே படுகின்றது.

கொள்கை, கோட்பாடுகளின் பெயரில் யதார்த்தத்தைக் கோட்டை விடக் கூடிய இத் தரப்புகளை நம்பி இறங்குவது மண் குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்குவதற்கு சமன் என்று முதல்வர் எண்ணியிருப்பாரோ என்னவோ...?

# மைத்திரியும் ரணிலும் ஆஜராகவில்லை; திஸ்ஸவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!



வவுனியா, டிசெ. 05

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிரான வழக்கை மூன்றாவது முறையாகவும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

வழக்கின் சாட்சியாளர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை இருக்கிறது எனக்கூறி போலி ஆவணம்ஒன்றைப்பகிரங்கப்படுத்தி இனங்களுக்கு இடையிலான சக வாழ்வைச் சீர்குலைக்க முயற்சித்ததாக திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொள்ள இருக்கின்றமையால், தமது தரப்பு வாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

இதற்காக வேறு திகதி ஒன்றைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், அன்றைய தினம் ஜனாதிபதியையும் பிரதமரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரியப்படுத்தும்படி சட்டத்தரணிகளுக்கு அறிவித்துள்ளது.

அதேவேளை, திஸ்ஸ அத்தநாயக்க இம்மாதம் 10ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை ஆஸ்திரேலியாவுக்கு செல்லவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# ஊவாவில் பட்ஜெட்; ஐ.தே.க. வெளிநடப்பு

### ஆயினும் அது நிறைவேறியது

2018ஆம் ஆண்டுக்கான ஊவாமாகாணசபையின்வரவு–செலவுத் திட்டம் மேலதிக 16 வாக்குகளால்நேற்றுநிறைவேற்றப்பட்டது.

பட்ஜெட்டுக்கு ஆதரவாக ஆளும்கட்சியானஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள்வாக்களித்தனர். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவர் மாத்திரமே எதிர்த்து வாக்களித்தனர்.

ஊவா மாகாண சபை நேற்றுக் கூடியபோது, அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை முதலமைச்சர் சமர்ப்பித்தார். இதையடுத்து விவாதத்தில் பங்கேற்காமல் ஐ.தே.க. வெளிநடப்புச் செய்தது. இதனால், நான்கு நாள்கள் தொடர வேண்டிய பட்ஜெட் மீதான விவாதம் ஒரே நாளில் முடிவடைந்துவிட்டது.

ஆளுங்கட்சிசார்பாகஇருந்த சபை உறுப்பினர்கள் 18 பேரும் நிதி அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஊவா மாகாண சபையில் ஐ.தே.க. உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எமது கட்சியால் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நல்லாட்சி என்று கூறப்பட்டபோதிலும், அந்த நல்லாட்சி இங்கு இடம்பெறுவதில்லை. எனவே, வரவு–செலவுத் திட்ட விவாதத்தைப் புறக்கணிக்கின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஊவாமாகாணசபையானது சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றது. முதலமைச்சரும், அமைச்சரவை உறுப்பினர்களும்ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியில் கூட்டாட்சி நடத்தும் ஐக் கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் மாகாணத்தில் இவ்வாறு முரண்பட்டு செயற்படுகின்றமையானது அரசியல்களத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# யாழ். ஐந்து சந்தி வடிகால் நிலைமை படுமோசம்

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ். ஐந்து சந்தி மானிப்பாய் வீதியிலுள்ள வடிகால் நீண்ட காலமாகக் கழிவுகள் வெளியேற்றப்படாமல் அடைபட்ட நிலையில் காணப்படுகின்றது.

வடிகால் உள்ளேயும், வெளியேயும் கழிவுப் பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றன. அத்துடன், வியாபார நிலையங்களின் பொருள்களும் வடிகாலை இடைமறித்துப் போடப்பட்டுள்ளன.

இதனால், டெங்கு நுளம்பின் உற்பத்தி அதிகரிப்பதுடன், வீதியில் சிறுவர்கள், வயோதிபர்கள் நடமாட முடியாத நிலை காணப்படுகிறது.

யாழ். மாநகருக்குரிய பிரதேசமான இப்பகுதியை சுகாதாரமாவும் தடையின்றி பிரதேசமாக ஏற்படுத்தித் தருமாறு மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (இ - 19)

# சைவநெறித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு

சைவபரிபாலன சபையால் நடத்தப்பட்ட தரம் 2 முதல் 11 வரையான சைவநெறி, தரம் 2 முதல் தரம் 8 வரையான தமிழ் மொழி பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் சைவபரிபாலன சபை மண்டபத்தில் குழு முறையில் நடைபெறவுள்ளன.

இப்பணிக்கு சைவநெறி, தமிழ்மொழி கற்பிக்கும் தகைமை பெற்றுள்ள ஆசிரியர்களை உதவும்படி பரீட்சைச் செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். இப்பணியில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் பெயர், விவரங்களைப் பரீட்சைச் செயலாளர், சைவபரிபாலன சபை, 66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குக் கடிதம் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அறியத்தரும்படி சபை அறிவித்துள்ளது. (இ)

# வட்டு. பால் கொள்வனவு நிலைய கட்டட திறப்பு விழா

வட்டுக்கோட்டைகால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் மாவடி அடைக்கலந் தோட்டம், ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள பால் கொள்வனவு விற்பனை நிலையப் புதிய கட்டடத் திறப்பு விழா -

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு, சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொள்வார். (இ)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

வறுமையும் வன்முறையும் தாக்குவது பெண்களையே. வறுமையை ஒழிப்போம் வன்முறையை தடுப்போம் சமத்துவமான சமுதாயத்துக்காய் ஒன்றுபட்டு உழைப்போம்.

JSAC

16
2017

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

## நாளை

06.12.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : புனர்பூசம் பி.இ. 3.43 வரை
திதி : திருதியை பி.ப. 3.38 வரை
சுபநேரம் : 4.47 – 6.17 வரை
இராகுகாலம்: 12.17 – 1.47 வரை

# தமிழ்க் குடும்பம் ஒன்றை இலங்கைக்கு நாடு கடத்தியது கனடா!

ஐந்து ஆண்டுகளாக கனடாவில் வசித்து வந்த தமிழ்க் குடும்பம் ஒன்று, புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை மொன்றியல் விமான நிலையத்தில் இருந்து இவர்கள் விமானம் ஒன்றில் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளனர்.

லோரன்ஸ் என்பவரை தலை வராக கொண்ட இந்தக் குடும்பத்தினர், மனிதாபிமான அடிப்படையில் கனடாவில் நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர்.



எனினும், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்தே, இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

போரின்போது கிழக்கு மாகாணத்தில் ஐ.நா. அமைப்புக்காக பணியாற்றிய லோரன்ஸ், 2012ஆம் ஆண்டு தனது குடும்பத்தினருடன் கனடாவில் தஞ்சமடைந்திருந்தார்.

எனினும் கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை மறுக்கப்பட்டதை அடுத்தே, இவரது குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தும் முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கனடிய அரசிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தினத்திற்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்!



பிரதமர் ரணில் தெரிவிப்பு

சுதந்திர தினத்திற்குப் பின்னர் வரும் சனிக்கிழமை தினத்தன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் நாகொல்லாகொட கமன்னா பவ்வ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டே பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இது தொடர்பில் மேலும் பிரதமர் தெரிவிக்கையில்-

தேர்தலை நடத்துவதற்குத் தடையாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த வழக்கைத் தாக்கல் செய்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். இதன் மூலம் தேர்தலை நாடு முழுவதும் ஒரே நாளில் நடத்தலாம் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

## சங்கைக்குரிய தேரர் பேமசிறி நாயக தேரரின் பிறந்தநாளுக்கு ஜனாதிபதி வாழ்த்து!

கொழும்பு, டிசெ. 05

ஸ்ரீலங்கா ராமான்ய மகா நிகாயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய நாபான பேமசிறி தேரரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்து சுக துக்கங்களை விசாரித்துள்ளார்.



கண்டி மெனிக்ஹின்ன ஸ்ரீவித்யா சாகர மகா பிரி வெனாவுக்கு நேற்று சென்ற ஜனாதிபதி சங்கைக்குரிய தேரர் பேமசிறி நாயக தேரரின் 96ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தேரருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், தேரரின் நீண்ட ஆயுளுக்காகவும் ஜனாதிபதி பிரார்த்தித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயகவும் கலந்துகொண்டார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி பொல்கொல்லை நீர்த்தேக்கத்தையும் பார்வையிட்டார் அத்துடன், மக்களுடனும் சுமுகமாக கலந்துரையாடினார்.

## நல்லூர் நாயன்மார்கட்டுப் பகுதியில் சமுர்த்தி வங்கி அருகில் கழிவுகள்



யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு சமுர்த்தி வங்கிக்கு அருகில் கழிவுப்பொருள்கள் கொட்டப்பட்டு வருகின்றன என்று அந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாயன்மார்கட்டு குளத்தடிப் பிள்ளையாருக்கு அண்மையில் சமுர்த்தி வங்கி இயங்கி வருகின்றது.

இந்த வங்கியில் பணிபுரிபவர்கள் அவர்களின் பாவனையின் பின்னான கழிவுப்பொருள்கள், வெற்றுத் தகரப் பேணிகள், பெயிண்ட் பேணிகள் என்பனவற்றை வங்கி அமைவிடத்துக்கு அருகே வீசிவிட்டுச் செல்கின்றனர்.

இதனால், தற்போது பெய்யும் மழை காரணமாக நீர்தேங்கி டெங்குநோய் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

வீடுகள்தோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொண்டர்கள், அரச நிறுவனங்களின் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எமது பகுதியில் சுகாதாரச் சீரின்மை தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஊர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தோட்டக்காணி அபகரிப்புக்கு எதிராக லிந்துலை லோகி மக்கள் ஆர்ப்பாட்டம் !

கொழும்பு, டிசெ. 05

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லோகி தோட்டத்திற்குச் சொந்தமான காணியை வெளியார் ஆக்கிரமிப்பு செய்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தத் தோட்ட மக்கள் ஆர்பாட்டமொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

தலவாக்கலை நுவரெலியா பிரதான வீதியின் லோகி தோட்டத்திற்கருகில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் வீதியை மறித்து தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதான வீதியின் ஓரத்திலுள்ள லோகி தோட்டத்திற்குச் சொந்தமான காணியைத் தனியார் ஒருவர் ஆக்கிரமித்து கம்பிவேலியை போட்டிருந்த நிலையில் அதனை உடைத்து எறிந்த தோட்டமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

மேலும் இந்த நிலப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கடையை அகற்றக்கோரியும் தோட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆர்ப்பாட்டகாரர்கள் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir



# கிழக்கில் எந்தவோர் அபிவிருத்தியும் இல்லை

## முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு



மட்டக்களப்பு,டிசெ.05

எந்தவோர் அபிவிருத்தியும் கடந்த இரண்டு மாதங்களாகக் கிழக்கு மாகாணத்தில் இல்லை எனக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆசிரியர் தேர்வுப் பொதுப் போட்டிப் பரீட்சையில்சித்தியடைந்து புறக் கணிக்கப்பட்ட பட்டதாரிகள் முன்னாள் முதலமைச்சரை அவ ரது இல்லத்தில் நேற்றுமுன் தினம் சந்தித்துத் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக எடுத்து ரைத்தனர். இதன்போது பட்டதாரிகளின் குறைகளைக் கேட்டறிந்து கொண்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்

சமீபத்தில் வழங்கப்பட்ட பட்ட தாரிகளின் நியமனத்தில் குளறு படிகள் இடம் பெற்றுள்ளன எனப் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் எழுதிப் பல் கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகள் ஏன் அலைக் கழிக்கப்பட வேண்டும்.

நமது நாட்டுப் பல்கலைக் கழகங்கள் தவறு விடுகின்றனவா அல்லது பரீட்சைகளில் தவறு உள்ளதா? என்ற நியாயமான கேள்வி எழுகின்றது. கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்கள் இப் பொழுது இடம்பெற்று வருகின் றன. எந்தவொரு அபிவிருத்தியும் கடந்த இரண்டு மாதங்களாக கிழக்கு மாகாணத்தில் இல்லை. எல்லாமே முடக்கப்பட்டிருக்கின்றது. மாகாணத்தில் செய்து முடிக்கப் படவேண்டியஎத்தனையோ தேவைகள் உள்ளன.

நல்லாட்சியின் பெயரைச் சீர் குலைப்பதற்கும். இன உறவைச் சீர்குலைப்பதற்கும் ஏதுவாகப் பல கருமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நல்லாட்சியில் குளறு படிகளை அனுமதிக்க முடியாது. அநீதிக்கு எதிராக நாம் குரல் கொடுப்போம். இதனை நல்லாட்சியின் நாயகர்களான ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் அறிவிக்க வுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மது உற்பத்தி நிலையம் வவுணதீவு பொலிஸால் முற்றுகை



மட்டக்களப்பு,டிசெ.05

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலபோட்டமடு ஆற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கிவந்த மதுபான உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

வவுணதீவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் மதுபான உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

கலபோட்டமடு பகுதியில் உள்ள ஆற்றங் கரையை அண்டிய காட்டுப்பகுதியில் இந்த மதுபான உற்பத்தி நிலையம் இயங்கிவந்துள் ளது.

இதன்போது, மதுபானம் தயாரிப்பதற்குப் பயன் படுத்தப்படும் 20ஆயிரத்து 250 மில்லிலீற்றர் கோடா மற்றும் 4ஆயிரத்து 125 மில்லிலீற்றர் மதுபானம் என்பனவற்றைமீட்டுள்ளனர் எனவும் மதுபான உற்பத்தியில்ஈடுபட்டிருந்தவர்கள் தப்பிச்சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தப்பிச் சென்றவர்களைக் கைது செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வவுணதீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ரி.நசீர் குறிப்பிட்டுள்ளார்.

(ப)


# உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் - 2018

## அஞ்சல் மூலம் வாக்களிக்க எதிர்பார்க்கின்ற அரசாங்க அலுவலர்கள், பாதுகாப்பு அலுவலர்களுக்கான அறிவித்தல்.

2017 டிசெம்பர் மாதம் 04 ஆந் திகதி வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட 248 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகைமை பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கையேற்கும் கால எல்லை 2017 டிசெம்பர் 22 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையவுள்ளது. அத்திகதி எவ்விதத்திலும் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

02. இத்தேர்தலின் போது குறித்த உள்ளராட்சி சபை அதிகார எல்லைக்குள் தேருநர்களாகப பதவி செய்யப்பட்டுள்ளவர்களும், தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுமான அனைத்து அரச அலுவலர்கள்/ ஊழியர்கள், அதிபர்கள்/ ஆசிரியர்கள், அப்பிரதேசங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலர்கள்/ஊழியர்கள், தபால் திணைக்களத்தின் அலுவலர்கள்/ஊழியர்கள், புகையிரத சேவையை நடாத்திச் செல்வதற்குத் தேவையான இன்றியமையாத புகையிரத திணைக்கள அலுவலர்கள்/ ஊழியர்கள் மற்றும் நாடெங்கிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முப்படைகளினதும் பொலிஸ் திணைக்களத்தினதும் நேரடி பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள சிவில் பாதுகாப்பு படையணியினதும் அங்கத்தினர்கள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் தகைமைகளைப் பெறுவதோடு, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற காலக்கெடு முடிவடையும் வரை காத்திராமல் உடனடியாக தமது விண்ணப்பப் படிவங்க்ளை சமர்ப்பிக்குமாறு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகைமையுள்ள அனைவரிட மும் தயவன்புடன் கோரப்படுகின்றது. மேலும் இத்தேர்தலின் போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங் களை சமர்ப்பிக்கையில் அதற்கான தகவல்கள் 2017 ஆம் ஆண்டின் உள்ளர் அதிகார சபை தேருநர் இடாப்பிலிருந்து சரியாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகுன்றது.

03. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பப படிவங்களை தனிப்பட்ட முறையில் பரிசீலித்துப பார்த்து விண்ணப்பதாரின் ஆளடையாளம் தொடர்பாக உறுதிப்படுத்திக கொணட்தன் பின்னர் அத்தாட்சிப்படுத்த வேண்டுமெனவும், அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் முடிந்தளவு விரைவில் குறித்த விண்ணப்பதாரி வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 2017 டிசெம்பர் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய தேர்தல் அலுவலகத்திற்கு கிடைக்கத்தக்கவாறு அனுபப்பட வேண்டுமெனவும, அத்திகதி மீண்டும் நீடிக்கப்பட மாட்டாதெனவும் உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களும் முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுமெனவும, அனைதது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது. உரிய காலப்பகுதியின் இறுதித தினத்தன்று அல்லது அதற்கு முந்திய தினத்தன்று விண்ணப்பப்படிவங்கனை அஞ்சலில் சேர்ப்பதற்குப் பதிலாக தேர்தல் அலுவலகத்திற்கு நேரடியாக கொண்டுவந்து கையளித்தல் மிகப் பொருத்தமாக இருக்குமென்பதை தயவு செய்து கருத்தில் கொள்ளவும்.

04. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான உரிமையுள்ள அனைத்து அஞ்சல் வாக்காளர்களினதும் வசதி கருதி உள்ளர் அதிகார சபைகளின் தேருநர் இடாப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் (அனைத்து உள்ளராட்சி சபைகளினதும் இடாப்புக்கள்.)
2. பிரதேச செயலகங்கள் (அந்தந்த பிரதேச செயலக அதிகார எல்லைக்குற்பட்ட பிரதேசங்களில் இடாப்புக்கள்.)
3. உள்ளர் அதிகார சபை அலுவலகங்கள் (அந்தந்த உள்ளர் அதிகார சபைகளின் இடாப்புக்கள்.)
4. அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்கள் (அந்தந்த பிரிவுக்குரிய இடாப்புக்களின் பகுதிகள.)
5. பொது நிருவாக அமைச்சு, பொலிஸ் தலைமையகம், தொழிற் செயலகம், அஞ்சல் தலைமையகம், புகையிரத தலைமையகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு, கல்வி அமைச்சு (இசுருபாய), பதிவாளர் நாயகத் திணைக்களம் (பத்தரமுல்லை), நகர அபிவிருத்தி அதிகார சபை (செத்சிறிபாய), ஆட்பதிவு திணைக்களம் (சுஹுருபாய) இவ்விடங்களின் அனைத்து உள்ளராட்சி சபைகளினதும். இடாப்புக்கள் காட்சிப்படுத்தப்படும்.

05. மேலும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளதில் (www.election.gov.lk) என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து தேருநர் இடாப்பு 2017 என்ற தலைப்புக்குள் பிரவேசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தத்தம் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் துணையோடு அஞ்சல் வாக்கு விண்ணப்பப்படிவங்களை நிரப்புவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

06. பாதுகாப்பு படை முகாம்களில் பணியாற்றுகின்ற அப்படைகளுக்கான அங்கத்தினர்களின் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை நிரப்புவதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதறக்கான விசேட நடைமுறையொனறு அப்படைகளின் தளபதிகளோடு கலந்துரையாடி ஒழுங்கு செய்யப்படும்.

07. இதற்கு மேலதிகமாக தேருநர்கள் கூட்டமொன்றின் தகவல்கள் தேவைப்படுகுன்ற சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ள அஞ்சல் வாக்குகளுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான படிவத்தை நிரப்பி தேர்தல் ஆணைக்குழுவின் 011 -2868426 என்ற தொலைநகலுக்கோ (it@elections.gov.lk) என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைப்பதனூடாக அஞ்சல் வாக்களார்களுக்கு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தேர்தல்கள் செயலகம் சரணமாவத்தை
இராஜகிரிய. 2017.12.05

மஹிந்த தேசப்பிரிய தவிசாளர, தேர்தல்
ஆணைக்குழு (தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

# கொழும்புத் துறைமுகத்தில் பிரெஞ்சுப் போர்க் கப்பல்



கொழும்பு, டிசெ. 05
பிரெஞ்சுக் கடற்படையில் புதிதாக இணைத்துக் கொள்ளப் பட்ட போர்க் கப்பலான FS Auvergne நான்கு நாள்கள் நல்லெண்ணப் பயணமாக நேற்றுமுன் தினம் கொழும்புத் துறைமுகத் துக்கு வந்துள்ளது.

புதிதாகக் கட்டப்பட்ட பல நோக்குப் போர்க்கப்பலான FS Auvergne இந்தியப் பெருங் கடலில் முதலாவது நடவடிக் கைப் பயணத்தை மேற்கொண் டுள்ளது.

ஒகஸ்ட் 18 ஆம் திகதி ரோலோன்



துறைமுகத்தில் இருந்து, புறப் பட்ட இந்தப் போர்க்கப்பல் இந்தி யாவின் கர்வார் கடற்படைத் தளத் துக்கு ஒக்ரோபர் மாதம் சென்றி ருந்தது. அங்கிருந்து நேற்றுமுன் தினம் கொழும்புக்கு வந்துள்ளது.

இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினரும், பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகளும் கொழும்பு துறைமுகத்தில் வரவேற்றனர்.

142 மீற்றர் நீளமான இந்தப் போர்க்கப்பலில், Aster மற்றும் Exocet MM ரகத்தைச் சேர்ந்த 40 ஏவுகணைகள் , MU 90 டோபி டோக்கள் உள்ளன.

27 கடல் மைல் வேகத்தில் பய ணிக்கக் கூடிய இந்தப் போர்க் கப்பல் தொடர்ந்து 6000 மைல்க ளுக்குப் பயணம் செய்யக் கூடியது. ஹெலிக்கொப்டர் அணி ஒன்றையும் உள்ளடக்கிய இந்தப் போர்க்கப்பலில், 142 பிரெஞ்சு மாலுமிகள் பணி யாற்றுகின்றனர்.

## சிவனொளிபாதமலைக்கு கஞ்சா கொண்டு சென்றவர்கள் கைது!



கொழும்பு, டிசெ. 05
சிவனொளிபாதமலைக்கு கஞ்சா போதைப் பொருளைத் தம்முடன் எடுத்துச்சென்ற நால்வரை அட்டன் கலால் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சிவனொளிபாதமலை பருவ காலம் நேற்று முன் தினம் உதயமான பௌர்ணமி தினத்துடன் ஆரம்ப மானது.

ஆரம்பமான முதல் தினத்திலிலேயே 750 மில் லிகிராம் கஞ்சா போதைப்பொருள் கொண்டு சென்ற நான்கு பேரை நோட்டன்பிரிஜ், தியகல பிரதேசங் களில் வைத்து அட்டன் கலால் திணைக்கள அதி காரிகள் கைதுசெய்துள்ளனர்.

மத்திய மாகாண கலால் திணைக்கள ஆணையா ளர் காமினி அதிகாரி, நுவரெலியா கலால் திணைக் கள அதிகாரி உபுல் செனவிரத்தன, அட்டன் கலால் திணைக்கள அதிகாரி திலக்கரத்ன ஆகியோரின் வழிகாட்டலில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் புசல்லாவை பகுதியில் இருந்து சிவனொளிபாதமலையைத் தரிசிக்க வருகை தந்தவர்கள் என்றும், கைது செய்யப்பட்டவர்களை அட்டன் நீதிவான் முன்னி லையில் ஆஜர் செய்யவுள்ளனர் என கலால் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித் துள்ளார்.

## நெல் உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு காப்புறுதி!



கொழும்பு, டிசெ. 05
இயற்கை உரத்தைப் பயன்படுத்தி தேசிய பாரம்பரிய நெல் உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளின் உற்பத்திக்கு காப்புறுதி வழங்க விவசாய காப்புறுதிச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்து வதற்கான நடவடிக்கை இம்முறை பெரும்போகம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்தகைய நெல் உற்பத்திகளில் ஆர்வம்கொண்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல் மத்திய நிலையங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## வடக்கிலும் களத்தில் குதிக்கிறது இ.தொ.கா.



கொழும்பு, டிசெ. 5
வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி வடக்கில் சேவல் சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

முல்லைத்தீவு பிரதேச சபை மற்றும் வவுனியா நகரசபை ஆகியவற்றுக்கு, இ.தொ.கா சேவல் சின்னத்தில் போட் டியிடவுள்ளது.

அத்துடன், கொழும்பில் கொலன்னாவ நகரசபைக் கும் இ.தொ.கா. சேவல் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது.

இ.தொ.காவின் பட்டியலில் பிரபா கணேசனின் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளனர்.

## கண்டி உள்ளக விளையாட்டரங்கு ஜனாதிபதி மைத்திரியால் திறப்பு!

கொழும்பு, டிசெ. 05
சர்வதேச நியமங்களுடன் கூடிய உள்ளக விளையாட் டரங்கு அனுபவத்தை கண்டி இளைஞர் யுவதிக ளுக்கு வழங்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கண்டி மாநகரசபை உள்ளக விளையாட்டரங்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வால் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

145 வருடங்களாக மாட றுக்கும்தொழுவமாக இருந்து வந்த கண்டி சுதூஹம்பொல யில் உள்ள 80 பேர்ச்சஸ் விஸ்தீரணமான நிலத்தில் 22 கோடி ரூபா செலவில் இந்த உள்ளக விளையாட் டரங்கு நிர்மாணிக்கப்பட் டுள்ளது.

பேட்மின்டன், டேபல்டென்



னிஸ், வொலிபோல் மற்றும் நெட்போல் ஆகிய விளை யாட்டு வசதிகள், பார்வையா ளர்களுக்கான 2000 ஆசன வசதிகள், மாநாடு மற்றும் விழா நிகழ்ச்சிகளுக்கான வசதிகள், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக் கான தங்குமிட வசதிகள் போன்றவற்றை இவ்விளை யாட்டரங்கு கொண்டுள்ளது.

சமநிலையான உடல், உள ஆளுமையுடன் ஆரோக்கி யமும் ஒழுக்கப் பண்பாடும் கொண்ட சமூகத்தை உரு வாக்கும் நோக்குடன் கண்டி மாநகரசபையின் நிதி ஏற் பாடுகளின் கீழ் இந்த விளை யாட்டரங்கு நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து விளை யாட்டரங்கைதிறந்துவைத்த ஜனாதிபதி அங்கு நடை பெற்ற விளையாட்டுப் போட் டியையும் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, மத் திய மாகாண ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்க, முதல மைச்சர் சரத் ஏக்கநாயக, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மயந்த திசாநாயக்க, மாகாண அமைச்சர்களான எதிரிவீர வீரவர்த்தன, திலின பண்டார தென்னகோன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

## உள்நாட்டில் அடுத்தவருடம் முதல் மருந்துப்பொருள்கள் உற்பத்தி

கொழும்பு, டிசெ. 05

நாட்டில் பாவனையில் உள்ள மருந்துப் பொருள்களில் 80 சதவீதமானவை அடுத்த வருடம் முதல் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச மருந்து கூட்டுத்தாபனம் இதுவிடயம் தொடர்பில் 38 ஒப்பந்தங்களில் கைச்சாத் திட்டுள்ளது என கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் மருந்து உற்பத்திக்கென இரண்டு தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்படும். கடந்த வருடம் அரச மருந்து கூட்டுத்தாபனம் ஆயிரத்து 180 கோடி ரூபா லாபம் ஈட்டியுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்யுள்ளார். (க)

## தினசரி ராசி பலன் 05.12.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்தித்திங்கள் 20 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை துவிதீயைத் திதி பகல் 1.46 மணிவரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம் திருவாதிரை இரவு 12.20 மணிவரை. பின்னர் புனர்பூசம். மரணயோகம் இரவு 12.20 மணி வரை. பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *மாலை 2.54 மணிமுதல் 4.20 மணிவரை*

**சுபநேரம்** - *பகல் 10.53 மணிமுதல் 12.23 மணிவரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *கார்த்திகை மாத தேய்பிறை துவிதீயை - திரிதீயை*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *திருவாதிரை*

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். தொழிலில் அதிக பிரயாசையிருப்பினும் பலன் குறையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும்.

**ரிஷபம்:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தால் நல்ல முன்னேற்றம் உண்டாகும். உத்தியோக மாற்றங்கள், உயர்வுகள் விரும்பியபடி கிடைக்கும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். பெண்களின் ஆசை நிறைவேறும். புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**கடகம்:** கவலையான நாள். பணவரவு குறையும். உடலில் உபாதை உண்டாகும். வேலைச்சுமை அதிகரிக்கும். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது கடினம்.

**சிம்மம்:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். அந்நிய நாட்டுத் தொடர்புகள் ஆதாயம் தரும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வியாபாரத்தில் லாபம் குறையும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும். பயணத்தின் போது கவனம் தேவை.

**துலாம்:** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியிலும், பேச்சிலும் திறமையை வெளிப்படுத்துவார்கள். தொழில் விடயமாய் வெளிநாடு செல்லவும் வாய்ப்பு உண்டாகும்.

**விருச்சிகம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். தாய் வழிச் சொத்துகள் கைக்கு வந்து சேரும். தூர தேசத் தகவல் ஒன்றால் நன்மை உண்டாகும். சிலருக்கு திடீர் திருமண வாய்ப்புகள் அமையும்.

**தனுசு:** நன்மையான நாள். பொருளாதார நிலை உயரும். மாணவர்கள் கல்வி மேன்மை அடையும். வியாபாரிகளுக்கு செல்வம், செல்வாக்கு, வருமானம் பெருகும்.

**மகரம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். பெண்களின் வாழ்க்கைத் தரம் உயரும். வியாபாரம் நன்கு முன்னேற்றம் அடையும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்றிணைவர்.

**கும்பம்:** அதிஷ்டமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். அரச உத்தியோகத்தர்களுக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கும். மாணவர்களின் கல்வி விருத்தி அடையும். ஏற்றமான வாழ்வு அமையும்.

**மீனம்:** குழப்பமான நாள். பொருளாதாரம் பற்றாக் குறையாக இருக்கும். உடல்நிலை பாதிப்படையும். செய்யும் தொழிலில் இடையூறுகள் உண்டாகும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும்.

**சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.**

# பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடற்படையின் 13 குழுக்கள்!



நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையை எதிர்கொள்ளும் வகையில் இலங்கைக் கடற்படையினரால் 12 இலகு ரக படகுகளுடன் கூடிய 13 நிவாரணக் குழுக்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட தெற்கு, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் கடற்படையின் நிவாரண குழுக்கள் செயற்படுத்தப்பட்டன.

தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் ஆறு நிவாரண குழுக்கள் மனிதாபிமான உதவிகளில் ஈடுபட்ட அதேவேளை மீதமுள்ள குழுக்கள் சப்ரகமுவ மாகாணத்தில் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டன.

இந்த நடவடிக்கைகளின் போது, கடற்படை வீரர்களால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 155 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களில் சேர்க்கப்பட்டனர்.

மீட்பு நடவடிக்கைகள் தவிர, மரைன் கடற்படை அணிகள் உள்ளிட்ட கடற்படை வீரர்கள், சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட வீதிகளில் சரிந்து விழுந்து போக்குவரத் துக்கு இடைஞ்சலாக காணப்பட்ட மரங்கள், மின்சார, தொலைபேசி கம்பங்கள் மற்றும் பாறைகள் ஆகிய வற்றை சீர்செய்யும் பணிகளிலும் ஈடுபட்டனர்.

நில்வளா ஆற்றின் தொடர்ச்சியான நீர்போக்கை உறுதிப்படுத்தும் வகையில் அங்கும் கடற்படை சுழியோடிகள் நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காத மாணவர்கள் 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவியுங்கள்

கொழும்பு, டிசெ. 05

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் இதுவரை கிடைக்காத மாணவர்கள் மற்றும் அனுமதி பத்திரத்தில் ஏதாவது பிரச்சினைகள் இருப்பவர்கள் தாமதமின்றி அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அவ்வாறு பிரச்சினைகள் இருப்பவர்கள் அது தொடர்பில் 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன், பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் பாடசாலை அதிபர்களுக்கும், தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் பரீட்சார்த்திகளின் தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி. சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் 4 லட்சத்து 29 ஆயிரத்து 493 பாடசாலை பரீட்சார்த்திகளும், 2 லட்சத்து 59 ஆயிரத்து 80 தனியார் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 6 லட்சத்து 88 ஆயிரத்து 573 பேர் தோற்ற உள்ளனர்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

### சீரற்ற காலநிலை காரணமாக க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு பாதிப்பில்லை!

*கொழும்பு, டிசெ. 05*

*க.பொ.த. சாதாரண தர பரீட்சையை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டி.சனத் பூஜித தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*சீரற்ற காலநிலையால் இதற்கு எதுவித தடைகளை ஏற்படுத்தவில்லை என்றும் பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

*பரீட்சை அனுமதி பத்திரங்கள் சேதமடைந்திருந்தால் புதிய அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.*

*இன்று நள்ளிரவு முதல் மீட்டல் வகுப்புக்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.* (க)

## ஆறுமுக நாவலர் குருபூசை எப்போது?

"நல்லைநகர் நாவலர் இல்லையேல் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே?" - என்று கூறும் தமிழுலகம், அந்தப் பெரியாரின் குருபூசைத் தினத்தைச் சரியான நாளில் செய்யக்கூடாதா? நட்சத்திர அடிப்படையில் குறிப்பிடப்படும் குருபூசை தினம் ஆறுமுக நாவலருக்கு கார்த்திகை மாதத்தில் வரும் மக நட்சத்திரம் என்பது நாவலரின் வரலாறு தெரிந்த அனைவருக்கும் தெரியும்.



இத்தினம் சகல கணிப்பின் பிரகாரமும் 9.12.2017 சனிக்கிழமையன்றே வருகின்றது. ஆனால், 8.12.2017 வெள்ளிக்கிழமை ஆறுமுகநாவலர் குருபூசை என கலண்டர்களும், வாக்கிய பஞ்சாங்கத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. நாவலர் பெருமைகளை எப்போதும் பேசலாம். ஆனால், குருபூசைத்தினத்தை எல்லா நாள்களும் செய்யலாமா?

வாசகர் கருத்து மேடை

இக்குருபூசைத் தினத்தைச் சரியாக திருக்கணித பஞ்சாங்கத்திலும், திருக்கணித மாதக் கலண்டரிலும் 9.12.2017 சனிக்கிழமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே சைவ அன்பர்கள் சரியான நாளில் ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினத்தை மேற்கொண்டு அவருக்கு நன்றிப் பெருக்குடையவர்களாக விளங்குவார்களாக!

- நல்லூர்- - ஜே.சர்மா -

உலக அளவில் தற்போது 85 கோடி மக்கள் போதுமான உணவின்மையாலும், ஊட்டச்சத்து பற்றாக்குறையாலும் தவிக்கும் நிலையில், மண் வளத்தின் தன்மை மேலும் குறையுமானால், இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். மண் வளத்தைக் காக்கும் விழிப்புணர்வை உலகமெல்லாம் ஏற்படுத்தும் பொருட்டு ஐ.நா., உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் இயக்குநர் ஜோஸ் கிராசியானோ டாசில்வா 2015 ஆம் ஆண்டை உலக மண்வள ஆண்டு என அறிவித்தார்.


வரும் 2050 ஆம் ஆண்டிற்குள் உலகத்தின் மக்கள் தொகை ஆயிரம் கோடியை எட்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்றாற் போன்று உணவு உற்பத்தியையும் பெருக்க வேண்டும். இருக்கின்ற வளங்களையும் சேதாரமின்றிப் பாதுகாக்க வேண்டும் எனும் அடிப்படையில் மண் வளம் குறித்த விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

மண் வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் 2002 முதல் டிசெம்பர் 5 ஆம் திகதி உலக மண் தினம் எனக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஓர் அங்குலம் கனமுடைய மண் உருவாக குறைந்தபட்சம் 500 ஆண்டுகள் ஆவதாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஒரு கைப்பிடி அளவுள்ள மண்ணில் 45 வீதம் கனிமப்பொருள்களும், 25 வீதம் நீர், 25 வீதம் வளியும், 5 வீதம் நுண்ணுயிர்களும் நிறைந்துள்ளன.

மண்ணில் வாழும் நுண்ணுயிர்கள் ஒரு கிராம் மண்ணில் 5 ஆயிரத்திலிருந்து 7 ஆயிரம் வரையிலான பக்டீரியாக்களும், ஒரு ஏக்கர் மண்ணில் ஐந்திலிருந்து 10 மெ.தொன் வரையிலான எண்ணிக்கையில் பல்வேறு வகையான உயிர்களும் வாழ்கின்றன. பயிர் நிலமென்றால் ஏக்கர் ஒன்றில் 1.4 மெ.தொன் மண்புழுக்கள் வாழ்கின்றன. அந்தப் புழுக்கள் ஆண்டொன்றுக்கு 15 மெ.தொன் அளவிற்கு செறிவான மண்ணை உரு வாக்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகம் முழுவதும் பல்வேறு நிறங்களில் மண் வகைகள் இருந்தாலும், பொதுவாக கறுப்பு, பிரவுண் மற்றும் சாம்பல் நிறங்களிலேயே அவை காணப்படுகின் றன. மண்ணரிப்பு, இரசாயன உரங்கள் மற் றும் பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு அதிகரிப்பு, தொழிற்சாலைக் கழிவுகள், கால்நடைகளின் அளவுக்கு மீறிய மேய்ச்சல், கடல்நீர் ஊடுருவல் போன்ற செயல்பாடுகளே .

மண் வளம் சீர்கேடு அடைவதற்கான காரணம். ஒட்டு மொத்த உலகப் பரப்பளவில் இந்தியா ஏழாவது இடத்தை வகிக்கிறது. இந்தியா 32 லட்சத்து 87 ஆயிரத்து 782 ச.கி.மீ., பரப்பளவைக் கொண்டுள்ளது. இதில் 45 விழுக்காடு நிலப்பரப்பு வேளாண்மைக்குப் பயன்பட்டு வருகிறது. களிமண், செம்மண், கரிசல் மண் என எட்டு விதமான மண் வகைகள் காணப்படுகின்றன.



தாவர இனங்களுக்குத் தேவையான நைட்ரஜன், பொஸ்பரஸ், சுண்ணாம்பு, இரும்பு, மக்னீசியம், துத்தநாகம், மாங்கனீஸ், பொட்டாசியம் போன்ற கனிமச் சத்துக்கள் இந்த மண்ணில் நிறைந்துள்ளன. பொழிகின்ற மழைநீரை மண்ணுக்குள் ஈர்த்துக் கொள்ளவும், காற்றின் மூலமாகக் கிடைக்கும் நுண்ணூட்டங்களைப் பெற்றுக் கொள்ளவும் மண்வளம் செறிந்த தன்மையில் இருக்க வேண்டும்.




# உயிர்கள் வாழ மண் வளத்தை பாதுகாப்போம்

**கேள்விக்குறியாகும் மண்வளம் :**

அடுத்த 50 ஆண்டுகளுக்குள் நிகழக்கூடிய மக்கள் தொகைப் பெருக்கம் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தப்போகிறது. அதில் குறிப்பாக உணவு மற்றும் எரிபொருள் தேவை இரு மடங்காகவும், தண்ணீர் தேவை 150 விழுக்காடு கூடுதலாகவும் அதிகரிக்கும். நமது பருவநிலையில் நிகழ்ந்த மாறுதல் காரணமாக உயிரிப்பன்மயத்திலும் கடுமையான விளைவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக வல்லுநர்கள் எச்சரித்து உள்ளனர். கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு மக்கள் இடம் பெயர்வதால் ஏற்படும் சிக்கல், நகர்ப்புறங்களின் மண் வளத்தை மிகப் பெருமளவு பாதிக்கக் கூடும். காடுகளில் நிகழ்ந்த சூழல் கேடுகளும், அழிவுகளும் உயிரிப்பன் மயத்திற்கே உலை வைத்துவிட்டன.

இதனால், அங்கு உயி ரினங்களின் இருப்பு கேள்விக்குறியாகி உள்ளது. வனவிலங்குகளின் இருப்பே, காட்டு வளத்தையும், மண் மற்றும் நீர்வளத்தையும் பாதுகாக்கும் என்பதை உணரத் தவறியதால், இன்றைக்கு மிகப் பெரும் சூழல்கேட்டிற்குள் நாம் சிக்கி உள்ளோம்.

**மண்ணைப் போற்றிய மாண்பு :**

மண்ணைப் போற்றி வணங்குதல் என்பது நமது வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகும். ஐம்பூதங்களை நிலம், நீர், காற்று, நெருப்பு, வெளி எனத் தனித்தனியாக ஒவ்வொன்றையும் வணங்கி மகிழ்வது நமது பண்பாடு. புறநானூற்றுப் பாடல் ஒன்று, “மண் திணிந்த நிலனும், நிலன் ஏந்திய விசும்பும்” என்று ஐம்பூதங்களின் அற்புத செயற்பாடு குறித்து விளக்குகிறது. சங்க இலக்கியப் புலவரான குடபுலவியனார் “உணவெனப்படுவது நிலத்தொடு நீரே” என்கிறார். உணவாய் மாறும் திறன் படைத்தவையே நிலமும், நீரும் என்பது இதன் பொருளாகும்.

## இயற்கை வளங்களை சுரண்டி சூறையாடும் போக்கு வேண்டாம்



வசதிப் பெருக்கங்கள் அனைத்தும் மனிதர்களுக்கானதாய் இருந்தாலும், அவை மண்ணுக்கானதாய் இல்லை. பிளாஸ்ரிக் பொருள்கள் பயன்பாட்டில் இருந்து மின்னணுப் பொருள்கள் வரை மண்ணின் வளத்தைச் சீர்குலைக்கும் காரணிகளாக மாறிவிட்டன. ஆகையால் அப்பொருள்களின் பயன்பாட்டை கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்துக் கொள்ள முன்வர வேண்டும். இரசாயண உரங்களைத் தவிர்த்து, இயற்கை சார்ந்த வேளாண்மை செய்யும் மனப்பக்குவம் அனைத்து விவசாயிகளுக்கும் வளர வேண்டும். தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகளை முறையாகச் சுத்திகரித்து மறு பயன்பாட்டிற்கு உகந்த வகையில் மாற்றவேண்டும்.



இயற்கை வளங்களைச் சுரண்டி சூறையாடும், பொறுப்பற்ற போக்கு இனி யும் வளர்வதற்கு அனுமதிக்கக்கூடாது. உயிரினங்களின் இருப்பே, மனித குலத்தின் இருப்பு என்பதை உணர்தல் வேண்டும். இயற்கையை போற்றி, மதித்து, வழிபட்டு மகிழும் நம் மரபுகளுக்கு எதிராக ஒருபோதும் இயங்குதல் கூடாது என்ற உறுதிமொழியையும் இந்த நொடியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

மண்ணை உலகிலுள்ள மிகவும் பெறுமதி வாய்ந்த செல்வமாகக் கொள்ள முடியும். இது தாவரத்தை தாங்கக் கூடிய ஊடகமாகவும், தேவையான நீர், போஷணை திரவியங்களை அளிக்கும் வளமாகவும் தொழிற்படும்.

பயிர் செய்கையில் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் அறுவடையை பெற்றுக் கொள்ளுவதற்காக மண்ணின் பௌதிக, இரசாயன, உயிரியல் இயல்புகள் மிக முக்கியம் வகிக்கின்றன.காலநிலை, புவியியல் இயல்புகள், மூலப் பொருள்கள், புவியியல் மாற் றங் கள், உயிரினங்கள், காலம் அல்லது புவியின் பழைமை என்பன மண்ணின் உருவாக்கத்திற்கு முக்கிய காரணங்கள் ஆகும்.

★ ★ ★

**இலங்கையின் வயல் மண்**

இலங்கையில் நெற்செய்கை பண்ணப்படும் வயல் நிலம் அண்ணளவாக 780,000 ஹெக்டயர்களாகும். இம்மண் பல்வேறு விவசாயக் காலநிலை வலயங்களில் பரம்பல் அடைந்துள்ளன. வயல்மண், புவிஅமைவிடம், நீர்வ டிப்பு, மூலப்பொருள்களுக்கு ஏற்ப பிரதான மண் வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

**உலர் வலய வயல் மண்**

உலர்வலய வயல் மண்ணானது வெளிப்புறமாக பள்ளமான கட்டமைப்பாகவும் கடற்கரையை அண்டி மேடாகவும் காணப்படுவதுடன், வெள்ளப்பெருக்கிற்கு உட்படக்கூடியது ஆகவும் காணப்படும். வெளிப்புறமாகக் காணப்படக் கூடிய பள்ளமான கட்டமைப்புக்களில் உள்ள வயல்நிலங்கள் அகலமாக காணப்படி னும் சாதாரணமாக காணப்படும் நிலங்களின் வயல் மண்ணாக செங்கபில மண், களி மண், செங்கபில மண், முதிராத கபில மண், அலுவியல் மண் (ஆற்று மண்) என்பன காணப்படும்.

இதில் செங்கபில மண்ணின் PH வீதம் 6-7 ஆக காணப்படுவதுடன் காற்றூட்டலுடன் கூடிய மணல், களி, இருவாட்டியில் இருந்து மணல் கலந்த இருவாட்டி வரை வேறுபடும். உலர் வலயத்தில் உள்ள களி மண் சாம்பல் நிறத்தைக் கொண்டதுடன், மண் காற்றூட்டல் அளவு மணல், களி, இருவாட்டியில் இருந்து மணல், களி வரை வேறுபடும். PH வீதம் 6.7 - 7.5 ஆகக் காணப்படும்.

இங்கு பிரதான களி கனிப்பொருள்களாக மொன்டிமொரிலோனைட், கவோலினைட், இலைட் என்பன காணப்படும். இம்மண் உலர் வலயத்தில காணப்படும் மிகவும் வளமான மண் ஆகும். நீர் தட்டுப்பாடு இல்லை என்றால் உயர் விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

செங்கபில மண், முதிராத கபில மண் என்பவை உலர் வலயத்தில் கிழக்கு பகுதியில் அம்பாறை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற ஆழமற்ற மண் ஆகும். இதன் காற்றூட்டல் ஆனது மணல் கலந்த இரு வாட்டியிலிருந்து இருவாட்டி கலந்த மணல் வரை வேறுபடும். மத்திமமான காற்றூட்டலை கொண்டது, நடுத்தரமான நீர் வடிப்பை கொண்டதுடன் பௌதிக நீர் பற்றுத்திறன் சிறிது குறைவாகக் காணப்படும்.

ஆனாலும் இலங்கையின் மஹவ பிரதேசத்தில் உள்ள செங்கபிலமண், முதிராதகபிலமண் ஏனைய பிரதேசங்களில் உள்ள அம்மண்ணை விட அதிகளவு பயிர்களை உற்பத்தி செய்யக் கூடிய திறனைக் கொண்டது. இம்முதிராத கபில மண்ணுக்கு கீழ் அருகிலேயே களி மண் காணப்படும். (12 ஆம் பக்கம் பார்க்க...)




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

ரைஹ் ஜனாதிபதி, இராணுவத் தலைபதி, நீதித்துறை மற்றும் முதலாளித்துவக் கட்சிகள் என அரசு உயரடுக்குகள் தங்களை மிகவும் பிற்போக்கு சக்திகளுடன் அணி சேர்த்துக் கொண்டதனாலோ, ஹிட்லரை சான்சிலராக நியமித்ததனாலோ கூட, வைய்மர் குடியரசு தோல்வியடையவில்லை (இது தற்போதைய நிலையுடன் ஒப்பிடப்படுகின்றது) மாறாக, ‘‘ஒரு அதிகரித்த அளவில் துண்டுகளாக பிளவுபடும் பிரிவினரின் கட்சி ஆட்சி’’ ‘‘அரசு நலன்களுக்கு எதிராக மேலாதிக்கத்தைப் பெற்றதால்’’ ஏற்பட்டது என்று FAZ எழுதியது.

சமூக மற்றும் அரசியல் மோதல் தீவிரமடைகையில், சமூக நலன்களின் அரசியல் வெளிப்பாடுகளாக உள்ள கட்சிகளும், அந்தவிதத்தில் ஜனநாயகமும், ‘‘அரசின் நலன்களுக்காக’’ அதன் முன் மண்டியிடுகின்றன என்ற இந்தக்கருத்துத் தான் ஒவ்வொரு சர்வாதிகாரத்தின் தொல்சீர் நியாயப்படுத்தலாக உள்ளது. ஒகஸ்ட் 4, 1914 இல், முதலாம் உலகப் போர்ச் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு SPD வாக்களித்தபோது மற்றும் போர் எதிர்ப்பாளர்கள் சிறையில் தள்ளப்பட்டபோது, கைய்சர் வில்ஹெல்ம், ‘‘நான் எந்த கட்சிகளையும் இனி அங்கீகரிக்கப் போவதில்லை. நான் ஜேர்மனியர்களை மட்டுமே அங்கீகரிக்கிறேன் என்று இந்த இழிவார்ந்த கருத்தைத் தான் உச்சரித்தார்.

**சமூக ஜனநாயகக் கட்சி மீண்டும் அரசுக்குத் திரும்பி வருவது குறித்து Die Zeit உம் உற்சாகமடைகிறது. ‘‘அன்றாட வேலைகளை நிர்வகிக்க, தகைமை கொண்ட ஒரு புதிய அரசை மட்டுமல்ல, மாறாக ஐரோப்பிய ஒன்றியத்தைப் புதுப்பிக்கும் பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோனின் முன்மொழிவுகளுக்குப் பதில் அளிக்கின்ற மற்றும் நெருக்கடிகளுக்கு விடையிறுக்கும் ஒரு புதிய அரசை ஜேர்மனி விரைவில் பெறும் என்பது இப்போது மிக முக்கிய விடயமாகும்.’’ என்று SPD தரப்பில் உள்ள அந்த வாராந்தர பத்திரிகை எழுதியது.**

ஆளும் உயரடுக்கின் நலன்களுக்கேற்ப ‘‘நாட்டின் பிரச்சினைகளைக் கையாள்வது’’ மற்றும் சர்வதேச நெருக்கடிகளுக்கு விடையிறுப்பது என்று வருகையில், SPD நீண்ட காலமாகவே மிகவும் ஆக்ரோஷமான கட்சியாக இருந்து வந்துள்ளது. ஹார்ட்ஸ் சட்டங்களில் இருந்து ஓய்வூதிய வயதை 67 ஆக அதிகரித்தது வரையில், சிறிய தொழிற்சங்கங்களை ஒடுக்கும் ஒருங்கிணைந்த ஒப்பந்தச் சட்டம் வரையில், இணையத்தைத் தணிக்கை செய்யும் பேஸ்புக் சட்டம் வரையில், சமூக மற்றும் ஜனநாயக உரிமைகளின் அழிப்பு பெரிதும் SPD ஆல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.









மாபெரும் கூட்டணிக்குப் பின்னால் உந்துசக்தியாக உள்ள ஜனாதிபதி ஸ்ரைன்மையர், 2003 இல் ஹெகார்ட் ஷ்ரோடர் அலுவலகத்தின் தலைவராக இருந்த இவரே, உண்மையில் 2010 வலதுசாரித் திட்ட நிரலை எழுதியவர். வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்து, 2014 இல் ஜேர்மன் இராணுவவாத மீள் வருகையில் இவர் ஒரு முன்னணிப் பாத்திரம் வகித்தார். இவரை அடுத்து வந்த சிங்மார் காப்ரியேல் ஜேர்மன் இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கும், ஒரு சுதந்திர ஐரோப்பிய இராணுவத்தை கட்டமைப்பதற்கும் அழுத்தமளித்து வருகிறார். ட்ரம்ப் மேலுயர்ந்ததை வெறுமனே ஓர் அச்சுறுத்தலாக மட்டுமல்ல, மாறாக உலகின் புதிய பிராந்தியங்களில் இன்னும் தீர்க்கமாக ஜேர்மன் பெருவணிகங்கள் தலையீடு செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பார்க்க வேண்டுமென காப்ரியேல் அறிக்கை வெளியிட்டார்.

கூட்டாட்சித் தேர்தலுக்கான அதன் அறிக்கையில் ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சி (Sozialistische Gleichheitspartei - SGP) எச்சரித்தது. ‘‘CDU/CSU இல் இருந்து, FDP, பசுமைக் கட்சி, SPD மற்றும் இடது கட்சி வரையில், ஸ்தாபக கட்சிகள் அனைத்துமே இராணுவவாதத்தை, உள்நாட்டு ஒடுக்குமுறைக்கான அரசு எந்திரத்தைப் பலப்படுத்துவதை மற்றும் சமூக வெட்டுக்களின் கொள்கைகளை ஆதரிக்கிறது. இவை கூட்டாட்சி மட்டத்திலும் மாநில அளவிலும் சமூக வெட்டுக்களை ஒழுங்கமைக்கின்றன. இவை அனைத்துமே மக்களுக்கு எதிராக சதியாலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றன.’’

இது இப்போது நிரூபிக்கப்பட்டு வருகிறது. கூட்டாட்சி தேர்தலில் அதன் தோல்வியில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, மாபெரும் கூட்டணி ஆழமாக மதிப்பிழந்துள்ளது. இது தொடருமேயானால், திரைக்குப் பின்னால் நடக்கும் ஒரு சூழ்ச்சியில் தான் போய் முடியும். SGP இதை நிராகரிப்பதுடன், மீண்டும் தேர்தலை நடத்துமாறு கோருகிறது.

சமூக வெட்டுக்கள், அரசு எந்திரம் மற்றும் இராணுவவாதத்தைப் பலப்படுத்துதல் ஆகிய கொள்கைகள் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களிடையே பரந்த எதிர்ப்பை எதிர்கொண்டு வருகின்றன. ஆனால், இந்த எதிர்ப்புக்கு ஓர் அரசியல் முன்னோக்கு அவசியமாகும்; இல்லையென்றால், அதிகரித்து வரும் இந்தப் பதற்றத்தில் இருந்து வலதுசாரி இலாபமடையும். சமூக சமத்துவமின்மை மற்றும் முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்துடன் போருக்கு எதிரான போராட்டத்தை இணைக்கும் ஒரு சோசலிச மாற்றீட்டைக் கட்டமைக்க ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சி (SGP) போராடி வருகிறது.

(கேள்வி தொடரும்...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 26

### ஐந்தாவது கம்பன் விழா 25.09.1981

#### காமமும் கடப்பித்தார்

இலங்கைக்கான முதற்பயணம் முடித்து குருநாதர் தாயகம் திரும்புகிறார். தலைமன்னாரில் நானும், என் நண்பர்களும் , அவரைப் பயணம் அனுப்பச் சென்றிருந்தோம். சினிமாவும் , பெண்களும், சிரிப்பும், கூத்துமாய் இருக்கும், எனது இளம் நண்பர்கள் குருநாதரின் பிரிவைத் தாங்காமல், விம்மி விம்மி அழுதார்கள். ''இவர்களா அழுகிறார்கள்?'' என்று எனக்கோ எல்லையற்ற ஆச்சரியம். இளமைக்குள் காலடி எடுத்து வைத்து மகிழ்ந்திருந்த அந்த வயதில், அவர்கள் முகம் வாடிக்கூட நான் அதிகம் பார்த்ததில்லை. இலக்கியத்தின் பக்கம் தலைவைத்தும் படுக்காதவர்கள் அவர்கள். கண்ணீர் விட்டுக் கதறும் அளவுக்கு, அந்த ஒரு சில நாள் பழக்கத்திலேயே, அத்தனை பேரையும் குருநாதர் கவர்ந்து நின்றார். குருநாதரின் முகத்திலும் வாட்டம். வார்த்தையேதும் பேசாது கலங்கிய கண்களோடு எங்களோடு நின்றவர், ஒரு கையால் பேர்ஸையும், மறுகையால் வேட்டி தலைப்பின் ஒரு நுனியையும் பிடித்துக்கொண்டு, ஒன்றுமே பேசாமல் திடீரெனக் கப்பலை நோக்கி நடக்கத் தொடங்கினார். பேசினால் உணர்ச்சி வயப்பட்டு விடுவோமோ எனும், அவரது அச்சத்தை உணர முடிந்தது. நாம் யாழ். திரும்பும் போது அத்தனை பேர் இருந்தும் எங்கள் வண்டியில் பயங்கர நிசப்தம். சாதாரணமாய் இருந்திருந்தால் பாட்டாலும் கூத்தாலும் பஸ் அதிர்ந்திருக்கும். நீண்ட நேர மௌனத்திற்குப் பின், எங்கள் நண்பன் கிரி கலங்கிய குரலில் பேசத் தொடங்கினான். அவன் இன்பத்துறையில் எளியவனாய் விளங்குபவன் என்று சொல்லியிருக்கிறேன். அன்று அவன் சொன்னது இப்போதும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இதையெல் லாம் எழுதலாமா? என்று கேட்பீர்கள். கொச்சையானாலும் அவன் வாசகம் தந்த வலிய கருத்தை, பதிய வேண்டி யிருக்கிறது. ''மச்சான் இந்த அஞ்சாறு நாளா சுதிகூட வரயில்லையடாப்பா''. இளையோரையும் கவர்ந்த குருநாதரின் ஈர்ப்புக்காம், சாட்சி வாசகமாய் அவனது அந்தக் கூற்று அமைந்தது.

* * *

#### இந்தியாவுக்குப் படிக்கச் சென்றோம்

ஏ.எல். பரீட்சையில் நான் இரண்டாந்தரமும் படுதோல்வியடைந்தேன். குமாரதாசன் சுமாராய்ச் சித்தியடைந்தான். குமாரதாசன் வீட்டில் பெருங் கொந்தளிப்பு. கம்பன் கழகத்தோடு திரிந்து திரிந்து, படிப்பை விட்டு விட்டதாய் அவன் வீட்டில் ஆத்திரப்பட்டார்கள். நியாயமான கோபம் குமாரதாசன், அவன் வீட்டில் முதல் ஆண் பிள்ளை. அவன் வீழ்ச்சி மற்றைய பிள்ளைகளையும் பாதிக்கும் எனக் குடும்பத்தார் கருதினர். அதனால், படித்தே ஆக வேண்டும் என்ற நிலையில் குமாரதாசன், இந்தியா சென்று படித்தாலென்ன? என்ற எண்ணம் எமக்குத் தோன்றியது. குமாரதாசன் வீடும் அதனை ஆதரித்தது. கம்பன் அடிப்பொடியுடன் தொலைபேசியில் பேசினோம். அவர் அப்போது அழகப்பா பல்கலைக்கழக 'செனற் மெம்பராய்' இருந்தார். நாம் பேசியதும் அவர் கருணையோடு, தான் 'அட்மிஷன்'எடுத்துத்தருவ தாய்ச் சொல்லி, உடன் எம்மைப் புறப்பட்டு வரும்படி அழைத்தார். குமாரதாசன் வீட்டில் பணம் ஒழுங்குசெய்து அவரை அனுப்பினார்கள். என்பாடு சங்கடமாய் போயிற்று.

* * *

#### காப்பைக் கழற்றித் தந்தார்

எங்கள் வீட்டிலும் அப்போது கஷ்டமான சூழ்நிலை. நான் படித்து உருப்படுவேன் என்ற நம்பிக்கையும், என் வீட்டாருக்கு அதிகம் இருக்கவில்லை. அதனால் இந்தியா செல்லப் பணத்திற்கு என்ன செய்வது? என்று மிரண்டேன். எனது நண்பன் மாணிக்கத்தின் அக்கா, என்மேல் நிறைந்த அன்பும் மதிப்பும் கொண்டவர். தன் தம்பியர்களுள் ஒரு வனாகவே என்னையும் அவர் கருதுவார். என் சூழ்நிலையை அவரிடம் தயங்கித் தயங்கிச் சொன்னதும், நான் இந்தியா சென்று படிப்பதற்காக, தன் காப்புகளை அடகு வைத்து எனக்குப் பணம் தந்தார். முதன்முதலாக நானும், குமாரதாசனும் 'பிளேனில்' இந்தியா சென்றோம்.

* * *

#### அட்மிஷன் கிடைத்தது

நாம் காரைக்குடி சென்று சேர்ந்ததும், ''ஏன் இவ்வளவு தாமதம்?'' எனக் கம்பன் அடிப்பொடி சத்தம் போட்டார். நாங்கள் எந்தக் 'கோர்ஸ்' படிக்கப்போகிறோம் என்று தெரியாததால், தன் செல்வாக்கைக் கொண்டு எல்லாக் 'கோர்ஸ்களிலும்', இரண்டிரண்டு இருக்கைகளை அவர் தடுத்து வைத்திருந்தார். மறுநாள் காலை அவரே தனது காரில் எங்களை, பல்கலைக் கழகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவருக் கிருந்த மரியாதையைக் கண்டு ஆச்சரி யப்பட்டோம். துணைவேந்தர் வாச லுக்கு வந்து நின்று அவரை வரவேற் றார். அவருக்கென 'ஸ்பெஷலாய்' இளநீர் வாங்கி வெட்டி வைத்திருந்தார். கம்பன் அடிப்பொடி துணைவேந்தரிடம், ''இவங்கள என் பிள்ளைங்களப் போல நினைச்சு, நீங்க பாத்துக்கணும்'' என்றார். துணைவேந்தர் எங்கள் கல்வித் தகுதிகளை ஆராய்ந்து, குமாரதாசனுக்குப் பல்கலைக்கழக 'அட்மிஷன்' கொடுப்ப தாகவும், எனக்குப் 'பிளஸ் டூ', படிக்க இடம் வாங்கி தருவதாகவும் சொன்னார். அன்றிரவு முழுவதும் தூக்கமில்லை. அதற்கான காரணத்தைச் சொல்லுகிறேன்.

* * *

#### மனதைக் குழப்பிய சிந்தாமணிப் பத்திரிகை

'அட்மிஷனுக்காக' இந்தியா வந்த போது, ஒரு ஞாயிற்றுக்கிழமையன்றே நாம் விமானத்தில் பயணித்தோம். 'பிளேனில்' படிப்பதற்காக எங்களுக்கு, 'சிந்தாமணிப்' பத்திரிகை தரப்பட்டது. அப் போது 'தினபதி' என்ற பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. அது அரச சார்பான பத்திரிகை. அதனது ஞாயிற்றுக்கிழமைப் பதிப்பே 'சிந்தாமணி' பத்திரிகை. 'சிந்தாமணி' பத்திரிகையின் ஆசிரியராக எஸ்.ரி.சிவநாயகம் இருந்தார். அவரைப்பற்றி முன்னரேயே சொல்லியிருக்கிறேன். தமிழாராய்ச்சி மாநாட்டில் நான் பேசியது பற்றி, எங்கள் இருவரதும் படத்தையும் வெளியிட்டு தனது ''மாமதுரைச் சீமையிலே தேமதுரைத் தமிழோசை'' எனும், மதுரை மாநாடு பற்றிய கட்டு ரைத் தொடரில், அந்த வாரம் எஸ்.ரி.சிவநாயகம் எழுதியிருந்தார். மதுரை மாநாட் டில் நான் பேசிய பேச்சினைத் தக்கபடி விமர்சித்து, ''இவர்களால் எதிர்காலத்தில், ஈழத்து இலக்கிய உலகம் பயன்பெறும்'' என்பதாய், அக்கட்டுரையில் அவர் நம் பிக்கை வெளியிட்டிருந்தார். அவரின் பாராட்டைப் படித்ததும், எனது மனம் சங்கடப்பட்டுப் போனது. இத்தனை பேரின் நம்பிக்கையையும் பெற்ற பின்னர், எங்கள் சுயநலத்துக்காக, கம்பன் கழகத்தை விட்டுவிட்டுச் செல்வதா? கேள்வி எழ, நான் குழம்பிப் போனேன். அக்குழப்பம்தான் தூக்கமின்மையின் காரணம்.

* * *

#### மீண்டும் படிப்பைக் குழப்பினோம்

இரவு முழுவதும் குழம்பிய பின்னர், கற்பதற்குக் கம்பன் அடிப்பொடி பெற்றுத்தந்த வாய்ப்பினை உதறி, மீண்டும் கம்பன் கழகம் நடத்த யாழ். வருவதாய் நான் முடிவு செய்தேன். என்மேல் கொண்ட அன்பினால், தனக்குக் கிடைத்த பல்கலைக்கழக வாய்ப்பையும் உதறிவிட்டு, குமாரதாசனும் என்னுடன் திரும்பிவர முடிவுசெய்தான். காலையில், எங்கள் முடிவைச் சொன்னதும், கம்பன் அடிப்பொடிக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. ''என்ன விளையாடுறீங்களாடா?'' என்று சத்தம் போட்டார். கம்பன் கழகத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற, ஆசையினாற்தான் அந்த முடிவினை நாம் எடுத்ததாய்ச் சொன்னதும், அவர் கோபம் சற்றுத் தணிந்தது.

''அப்படியானால் கடிதம் மூலமாவது (Correspondance) படியுங்கடா!'' என்று, புத்திசொல்லி அதற்கு வேண்டியன வற்றையும் செய்து தந்து, எம்மை அனுப்பிவைத்தார். வீடு வந்ததும் குமாரதாசன் வீட்டில் பூகம்பம் வெடித்தது. பல்கலைக்கழக வாய்ப்பினைவிட்டுவிட்டு நாம்திரும்பிவந்த போது, குமாரதாசனின் பெற்றோர் எவ்வளவு வருந்தியிருப்பார்கள் என்பதை, இன்று தான் என்னால் உணர முடிகிறது. பெறாத பிள்ளைகள்மேல் பாசம் வைத்து, அவர் களின் செயல்களில் அளவுக்கதிகமாக அக்கறை காட்டி நிற்கும், இன்றைய எனது நிலையில், அப்பெற்றோரின் அன்றைய மனவருத்தத்தை என்னால் நன்கு உணர முடிகின்றது. அவர்கள் எப்படி எம்மைச் சகித்தார்களோ என நினைத்து இன்று வருந்துகிறேன். இன்று அவர்கள் உயிரோடு இல்லை. துன்பங்கள் என்னைத் தாக்கும்போது எல்லாம், அவர்களை வருத்தியதாற் தான் வருந்துகிறேனோ? என, நினைத்துக் கொள்வேன். தெய்வங்களாகி விட்ட அந்த ஆன்மாக்கள் என்னை மன்னிக்குமா?

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





கூட்டுறவுப் பெரியார் வி. வீரசிங்கத்தின் 53 ஆவது நிறைவு தினம் இன்றாகும். பெரியாரின் நினைவாக யாழ்ப்பாணத்தில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு, நினைவு தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதனையொட்டியே கூட்டுறவு சங்கங்களின் தோற்றம் தொடர்பான இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.



# கூட்டுறவு சங்கங்களின் தோற்றமும் அவற்றின் இன்றைய நிலையும்

ஸ்ரீ.நதிபரன்




கூட்டுறவே நாட்டுயர்வு என்ற முது மொழிப்பயன்பாடு கூட்டுறவுச் சங்கங்களின் வினைத்திறனான செயற்பாட்டுக்கு செயல்வடிவம் கொடுக்கிறது. கூட்டுறவு என்ற சொற்பயன்பாட்டுக்கு பல்வேறு அறிஞர்கள் பலவித விளக்கங்களைக் காண விளைந்தனர். அத்தகைய அறிஞர்களது கருத்து நிலைகளை ஒருங்கே நோக்குகின்றபோது கூட்டுறவு என்பது மக்கள் நலன் சார்ந்த, மக்கள் தங்கள் பொருளாதார நலன்களை பெருக்கிக்கொள்ளும் நோக்குடன் தன்னிச்சையாகச் சேரும் அமைப்பு என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமையை அறிந்து கொள்ளலாம்.

இது முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடைப்பட்டதாக விளங்குகிறது. அதாவது, எல்லோரும் ஒருவருக்கென்பது முதலாளித்துவம். ஒவ்வொருவரும் எல்லோருக்கும் என்பது பொதுவுடைமை. ஆனால், கூட்டுறவு என்பது ஒவ்வொருவரும்எல்லோருக்கும், எல்லோரும் ஒவ்வொருவருக்கும் என்ற நிலையில் இருக்கிறது. எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து தமது வாழ்வை மாத்திரமன்றி பிறரது வாழ்வையும் வளப்படுத்த வேண்டும் எனக் கூட்டுறவு போதிக்கிறது..

மேலும் கூட்டுறவின் உயர்ந்த கோட்பாடுகள் ஏனைய நிறுவனங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. முதலாளித்துவ அமைப்பில் காணப்படும் ஜனநாயக அம்சங்களைப் பொதுவுடைமை நிராகரிக்கிறது. தனி மனிதக் கருத்துச் சுதந்திரத்தையும் தொழிற் சுதந்திரத்தையும் பொதுவுடைமை நிராகரிக்கிறது. ஆனால், முதலாளித்துவம் ஏற்றுக்கொள்கின்ற ஜனநாயகமுறைகளைக் கூட்டுறவு ஏற்றுக்கொள்கிறது.

எனவேதான் இவ்வமைப்பை முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடைப்பட்டதாக விளங்குகின்றது எனக் கூறப்படுகிறது.

கூட்டுறவுசங்கம் எங்கே? எப்போது? தோன்றியது என்பதற்குப் பல்வேறு அறிஞர்களிடமிலுந்து பலவிதவாதப் பிரதிவாதங்கள் காணப்பட்டாலும் பொதுவாக 1761 இல் ஸ்கொட்லாந்தில் சில நெசவாளர்கள் ஒன்றிணைந்து ஓர் அமைப்பை ஸ்தாபித்தனர். இதுதான் உலகிலே முதல் கூட்டுறவுச்சங்கம் என்று கருதப்படுகிறது. அதன் செயற்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. இக் கூட்டுறவு அமைப்பின் ஸ்தாபகத்துடன் மேலும் பல கூட்டுறவு அமைப்புக்கள் பலநாடுகளிலும் முளைவிடத்தொடங்கின.

இந்த அமைப்புக்கள் முலம் மக்கள் பலவித பொருளாதார நன்மைகளை உச்ச அளவில் அடைந்தமையால் உலகிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து ஒரு பொதுவான அமைப்பொன்றை ஸ்தாபிக்க வேண்டிய தேவை எழுந்தது. இதன் காரணமாக அகில உலக கூட்டுறவு அமைப்பு 1895 ஆம் ஆண்டு சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரை தலைமையகமாகக் கொண்டு உதயமானது. இந்த அமைப்பில் 248 நாடுகள் அங்கத்துவம் பெற்றிருந்தன. இந்த அமைப்புக்கென சில கொள்கைகள், யாப்பு விதிகள் உள்ளன.

மேலும் மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டு மக்களால் நிர்வகிக்கப்படும் பொது நிறுவனங்களே கூட்டுறவுச் சங்கங்களாகும். இவற்றின் முக்கிய நோக்கங்களாக, அங்கத்தவர்களின் பிரச்சினைகளை முற்றாக களைந்து, அவர்களின் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களை மேம்படுத்துவதே கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும்.

அதுமாத்திரமன்றி, கூட்டுறவுச்சங்கங்களுக்கும் சமூகத்திலுள்ள ஏனைய நிறுவன அமைப்புகளுக்குமிடையே பல ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

# உயிர்கள் வாழ மண்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், இக்களிமண்ணின் பயிர் உற்பத்தி திறன் செங்கபில மண்ணிற்கு அருகில் உள்ள களி மண்ணின் பயிர் உற்பத்தி திறனிலும் மிகக் குறைவாகும்.

உலர் வலயத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள கூடிய அலுவியல் மண் (ஆற்று மண்) உண்டு. ஆறு, வாவி, கங்கைகளை சூழவுள்ள நீரால் மூழ்கடிக்கப்படக்கூடிய இடங்களில் அலுவியல் மண்ணை (ஆற்றுமண்) இலகுவில் அவதானிக்க முடியும்.

உலர் வலயத்தில் வடக்கு வடமேல் பிரதேசத்தில் கடற்கரை ஓரங்களில் சொலனேட் மற்றும் பொலனோவக்ஸ் போன்ற மண் வகை காணப்படுவதுடன் அவற்றில் உவர், அமிலத் தன்மை காணப்படுகிறது. இத்தன்மை நெல் அறுவடையில் பெரிய அளவு பாதிப்பை ஏற்படுத்தும். இதன் PH வீதம் 8.5 ஆகும்.

**இடை வலயத்தின் வயல் மண்**

நெற் செய்கையை மேற்கொள்ளக் கூடிய நிலப்பரப்பில் 25 வீதமானவை இதற்குள் உள்ளடங்கும். கால நிலை, மண்ணின் செங்குத்து உயரத்திற்கு ஏற்ப இடைவலயம் மேலும் 3 பகுதிகளாகப் பிரிக்கப்படும்.

**தாழ்நாட்டு இடை வலயம்**

நெற்செய்கை மேற்கொள்ளப்படும் செம்மஞ்சள் நிற பொட்சொலிக் மண் சிறிதளவு குறைந்த நீர் வடிப்புள்ள பிரதேசங்களில் காணப்படுவதுடன் களி மண் நீர் வடிப்பு குறைந்த இடங்களில் காணப்படும். பள்ளமான இடங்களை அண்டி அலுவியல் மண் (ஆற்று மண்) காணப்படும்.

களிமண்ணின் காற்றூட்டல் அளவு மணல்களியில் இருந்து மணல் களி இருவாட்டி வரை மாறு படும். இதன் PH வீதம் 5- 4 ஆகும். செம்மஞ்சள் நிற பொட்சொலிக் மண்ணில் மிகக் குறைந்த அளவிலேயே நெல் பயிரிடப்படுகிறது. அமிலத்தன்மை, இரும்பு நஞ்சாதல் போன்ற மண் பிரச்சினைகளை இம் மண் வகைகளில் அவதானிக்க முடியும்.

**இடைநாட்டு இடை வலயம்**

இங்கு செங்கபில லட்டசோல் மண், முதிராத கபிலமண்ணில் நெற்செய்கை பண்ணப்படுகிறது. கபில லட்டசோல் மண்ணில் நடுத்தர அளவான நீர் வடிப்பைக்கொண்ட பகுதிகளில் நெற்செய்கை பண் ணப்படும். PH வீதம் 6 ஆக காணப்படுவது உடன் பொஸ்பரஸ் அளவு மிகவும் குறைவாகக் காணப்படும்.

பொஸ்பரஸ் வழங்கல் சிறந்ததாகக் காணப்பட்டாலும் கல்சியம், மக்னீசியம் போன்ற கனிப்பொருள்களின் வழங்கல் மத்திமமாகும். நீர் வசதி காணப்படின் 2 போகங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும்.

**மலைநாட்டு இடை வலயம்**

இங்கு செம்மஞ்சள் பொட்சோலிக் மண் மற்றும் முதிராத கபில நிற இருவாட்டி மண்ணில் நெற் செய்கை பண்ணப்படுகிறது. ஒரு போகத்தில் நெல் பயிரிடப்படுவதுடன் ஏனைய போகங்களில் மரக்கறிவகைகள் பயிரிடப்படுகிறது.

**ஈர வலயத்தின் வயல் மண்**

இலங்கையில் முழு வயல் நிலப்பரப்பில் 30% காணப்படுவது ஈர வலயத்திலாகும். ஈர வலயமானது இடவுயரம், புவி வரைபடத்திற்கு ஏற்ப 3 பகுதிகளாகப் பிரிக்க முடியும்.

இடைநாடு, மலை நாட்டில் அமைந்து உள்ள ஒடுக்கமான பள்ளத்தாக்குகளிலும், மலைச்சரிவுகளிலும் தட்டுக்களாக அமைந்துள்ள வயல் நிலங்கள். தாழ்நாட்டு ஈர வலயத்தில் பள்ளத் தாக்குகளில் அமையப் பெற்றுள்ள வயல் நிலங்கள்.

கிழக்கு கடற்கரையை அண்டி அமைந்துள்ள வயல் நிலம், வெள்ளப்பெருக்கு நிலமைகளுக்கு பாத்திரமாகக்கூடிய பள்ளத்தாக்குகள் என்பவை ஆகும்.

இதில் இடை நாட்டு ஈர வலயத்தில் அமைந்து உள்ள அலுவியல் மண்ணில் (ஆற்று மண்) மகா போகத்தில் நெற்செய்கையும் சிறு போகத்தில் மரக்கறி செய்கையும் மேற்கொள்ளப்படும். இம் மண் மகாவலி நதியில் இருந்து ஊற்றெடுத்து பள்ளத்தாக்குகளாக, கம்பளை, கன்னொருவை பிரதேசங்களில் பரம்பலடைந்து காணப்படுகின்றது.

இம்மண் கடும் கபில நிறமாக காணப்படுவதுடன், சிறந்த நீர் வடிப்பையும் கொண் டது. காற்றூட்டல் களியுடன் கூடிய இரு வாட்டியில் இருந்து களி மண் வரை அதிகரிக்கும். PH வீதம் 4.5- 5 ஆக காணப்படுவதுடன் சேதன பொருள்கள் 1.4% காணப்படும்.

களி மண்ணும் இவ்வலயத்தில் காணப்படுகிறது. காற்றூட்டல் களியுடன் கூடிய இருவாட்டி மண்ணில் இருந்து களி மண் வரை வேறு படும். PH வீதம் 4.5 – 5 ஆக காணப்படும். இம்மண்ணில் இரண்டு போகங்களில் நெற் பயிரிட முடியும். தாழ்நாட்டு ஈர வலயத்தில் களி மண்ணை அவதானிக்கலாம்.

நலிந்த காற்றூட்டலை கொண்டது உடன் மேல்மண் மணல் கலந்த இருவாட்டி மண்ணில் இருந்து களி வரையான மண் காற்றூட்டலை கொண்டது. மழை அதிகமாக பெய்யும் காலங்களில் புவி நீர் மட்டம் புவிக்கு அண்மித்து காணப்படும். இம்மண் ஆழமாக காணப்படுவது உடன் சாம்பல் கலந்த கபிலம், சாம்பல் நிறம் மற்றும் கடும் சாம்பல் நிறமாகும்.

நெற்செய்கை காரணமாக தொடர்ந்து மேல் மண் படை கலப்பதால் சிறந்த காற்றூட்டலை காண முடியும். புவி நீர் மட்டம் கீழ், மேல் செல்வதனால் உறிஞ்சப்படும் களி கனிப்பொருள் கழுவப்பட்டு மண்ணில் இருந்து நீங்குவதனால் கீழ்ப்படையில் தடிப்புடைய மணலை அதிகம் காண முடியும். PH வீதம் 4 - 5.5 ஆக இருக்கலாம்.

தாழ் நாட்டு ஈர வலயத்தில் கிழக்கு, வட கீழ் கடலுக்கு அண்மையில் உள்ள பள்ளத்தாக்கு, மேட்டு நிலங்களில் நெற்செய்கை பண்ணப்படும்.

நலிந்த நீர்வடிப்பைக் கொண்ட மண் வகைகள் மூன்றை இப்பகுதியில் காண முடியும். அவை கனிப்பொருள் அடங்கி உள்ள மண், குறைசேற்று, சேற்று மண் என்பவையாகும்.

கனிப்பொருள் அடங்கி உள்ள மண் சிறந்த நீர் வடிப்பைக் கொண்ட மண் அல்லது நலிந்த நீர் வடிப்பைக் கொண்ட வலயங்களாக காணப்படும். PH வீதம் 5.5 ஆக காணப்படுவதுடன் மண் வளி மணல், களி கலந்த இருவாட்டியில் இருந்து களி, இருவாட்டி வரை அதிகரிக்கும்.

குறை சேற்று மண் விருத்தி அடைந்து உள்ளமைக்கான காரணம் ஓடை, கலப்புகளிலுள்ள சேதன பொருள்களாலும் நீர்த் தாவரங்களிலிருந்து கிடைக்கின்ற பொருள்களினாலும் ஆகும்.

இம்மண் அமிலமாவதுடன் PH வீதம் 5 – 5.5 ஆக காணப்படும் மேற்படையில் சேதனப்பொருள் அளவு 15 –25% ஆக காணப்படும். மண் வளி களியை ஒத்தது.

சேற்று மண் கடலை அண்டிய கலப்பு, சேற்று நிலங்களில் படிந்துள்ள சேதன பொருள்கள் மற்றும் களி கனிப்பொருள்களினால் உருவாகி உள்ளது. PH வீதம் 5.2 - 5.4 ஆகும். பொஸ்பரஸ் மிகக் குறைந்தளவே காணப்படும்.

நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டும் எனின் நீர் வடிப்பை மேம்படுத்த வேண்டும். பொதுவாக எமது நாட்டில் நெற்செய்கை அநேக பிரதேசங்களில் காணப்படுகின்றது. இவ்வாறு நெற்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் சூழற் காரணிகள் நெற்செய்கைக்கு பொருத்தமானதாக அல்லது பொருத்தம் அற்றதாகக் காணப்படலாம்.

யாதேனும் ஒரு பிரதேசத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியுமா எனத் தீர்மானிக்கும் காரணிகள் பல காணப்படுகின்றன. அவற்றுள்

1. நீர் கிடைப்பு தன்மை/மழை வீழ்ச்சி
2. மண்ணின் இயல்பு (தன்மை)
3. புவியியல் இயல்புகள்
4. வெப்பநிலையும், ஒளியும் போன்ற காரணிகள் முக்கியமாகும்.

தேசிய நெல் ஆராய்ச்சி நிலையம்
(N.RRI)
















கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்ற பிளசம் சிறுவர் கலை நிகழ்வில் மழலைகளின் காவடி ஆட்டம், கோலாட்டம், நடனம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட எச்.என்.பி.அஸ்யூரன்ஸ் வலய முகாமையாளர் ந.சுகுணன் முன்பள்ளி ஆசிரியர்களின் செயற்பாடுகளின் திறமை யைப் பாராட்டிப் பேசினார். சி.மாதவகுமாரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் இறுதியில் மழலைகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

(இ)

# உடையார்கட்டு குளத்தில் கிரவல் அகழ்வு; ஊழல் இடம்பெற்றது என மக்கள் சந்தேகம்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் உடையார்கட்டு குளத்தின் கீழ் பகுதியில் குளக் கட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் பகுதிக்குள் கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது.



இந்த கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்



பட்டதில் ஊழல் இடம் பெற்றதா என்று சந்தேகம் நிலவுகிறது என்றும் அதனை உடனடியாக நிறுத்துமாறும் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலக பிரிவில் உடையார்கட்டு குளத்தின் கீழ் பகுதியில் குளக் கட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் பகுதிக்குள் கிரவல் அகழ்வுக்கான அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

இதனால், பல்வேறு பாதிப்புக்கு மக்கள் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

எமது உடையார்கட்டு குளத்தை நம்பியே சுமார் 2 ஆயிரத்து 500 ஏக்கர் வயல் நிலங்களை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.

மீன்பிடி தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்கள் கால்நடை வளர்போர் குடும்பங்கள் என சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் இந்தக் குளத்தால் பயன்பெறுகின்றன.

குறிப்பாக இந்த கிரவல் அகழ்வு நடவடிக்கை காரணமாக குளம் உடைப்பெடுக்க வாய்ப்புள்ளது.

குளம் உடைப்பெடுத்ததால் பல்வேறு குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் சில கிராமங்கள் அழிந்து போகவும் வாய்ப்புள்ளது.

அதனைவிட, இந்த கிரவல் அகழ்ந்து கனரக வாகனங்களில் கொண்டு செல்வதால் வீதி பாதிப்படைகிறது.

பல ஆண்டுகாலம் திருத்தப்படாமல் இருக்கும் இந்த வீதியை இன்னும் பாழடைய செய்துவிட்டு நாம் என்ன செய்வது என்று தெரியாதுள்ளது. இவ்வாறு பல்வேறு ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளோம்.

எனவே, இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் போது அதிகாரிகளின் கூட்டு முயற்சியில் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

இங்கு கையூட்டல் ஏதும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என எண்ணத் தோன்றுவதாகவும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது இந்தப் பகுதிக்கு வந்து நேரடியாக இவற்றை ஆராய்ந்து இந்த அனுமதியை இரத்து செய்ய வேண்டும் எனக் கோருகின்றனர்.

அத்தோடு, கிரவல் அகழ்வு அனுமதியில் கிரவல் அகழப்படும் இடம் மீண்டும் மண் நிரவப்பட்டு மரநடுகை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டாலும் இந்த பகுதியில் தொடர்ச்சியாக கிரவல் அகழப்பட்ட கிடங்குகள் அவ்வாறே காணப்படுகின்றன எனவும், இவற்றையும் உரிய தரப்புக்களை கொண்டு மூட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மஹிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தலாம்!

கொழும்பு, டிசெ. 05


நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்கு மேலதிகமாகப் படையினரைத் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவின் மூலமாகவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சிக்காக பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் சகல பகுதிகளிலும் மக்கள் சந்திப்புகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்நிலையில், தமது அணியினருக்கும் தனக்கும் தொடர்ந்தும் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் ஆகவே தனக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை மேலும் அதிகரித்து தருமாறு அவர் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# வெறும் கதிரைகளுடன் நடைபெற்ற வவுனியா மாவட்ட கலாசார நிகழ்வு!



வவுனியா மாவட்ட கலாசார நிகழ்வு நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பலரும் கலந்து கொள்ளாமையால் அதிகளவிலான கதிரைகள் வெறுமையாகவே காணப்பட்டன.

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் வவுனியா மாவட்ட செயலகமும், பிரதேச செயலகமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இருப்பினும் முறையான ஒழுங்குபடுத்தல் மற்றும் சரியான முறையில் அழைப்புக்கள் வழங்கப்படாமை காரணமாக மாவட்டத்தின் பல கலைஞர்களும் கலந்துகொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், பாடசாலை மாணவர்களுடனும், விருந்தினர்களுடனும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சோமரட்ண விதானபத்திரண தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், இ.இந்திரராசா, ம.ஜெயதிலக, வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் இணைப்பாளர் முத்து முகமது உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் முதன் முறையாக ஜெயலலிதா முழு உருவச் சிலை

கோவை,டிசெ.05

தமிழ்நாட்டில் முதன் முறையாக ஜெயலலிதாவுக்கு முழு உருவச் சிலை கோவையில் திறக்கப்பட்டுள்ளது.

கோவை அவினாசி வீதியில் அண்ணா முழு உருவ வெண்கலச் சிலை உள்ளது. இந்த இடம் அண்ணா சிலை சந்திப்பு என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவையொட்டி அண்ணா சிலையை மீண்டும் புதுப்பிக்கும் பணி நடந்தது.

நேற்று முன்தினம் சிலையைச் சுற்றி இருந்த மறைப்புகள் அகற்றப்பட்டன. அப்போது அண்ணா சிலை யோடு எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரது முழு உருவ வெண்கலச் சிலைகளும் புதிதாக அமைக்கப்பட்டு இருந்தன.

7 அடி உயரத்தில் ஒரே பீடத்தில் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோர் இரட்டை விரலை உயர்த்தி காண்பிப்பது போலவும், அண்ணா ஒருவிரலை உயர்த்திகாண்பிப்பது போலவும் இந்தச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

தமிழக முதலமைச்சராகப் பதவி வகித்த ஜெயலலிதா மறைந்து ஓர் ஆண்டு ஆகும் நிலையில், கோவையில் அவருக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலேயே முதன் முறையாக ஜெயலலிதாவுக்கு முழு உருவச் சிலை நிறுவப்பட்டு இருப்பது கோவையில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)





## நான் அரசியல்வாதி அல்லன் மக்கள் பிரதிநிதியே – விஷால்

நான் அரசியல்வாதி அல்லன் மக்கள் பிரதிநிதியாகவே தேர்தலில் நிற்கிறேன் என்று எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் நடிகர் விஷால் பேட்டி அளித்துள்ளார்.

மனுத்தாக்கல் செய்வதற்காக விஷால் நேற்றுக் காலை 8 மணிக்கு அண்ணாநகரில் உள்ள அவரது வீட்டில் இருந்து புறப்பட்டார். முதலில் அண்ணாநகர் மகா காளியம்மன் கோவிலுக்கு நடந்து சென்றார். பின்னர் எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். எம்.ஜி.ஆரின் தாயார் சத்யா நினைவு இடத்திலும் அவரது படத்துக்கும், எம்.ஜி.ஆரின் மனைவி வி.என்.ஜானகி படத்துக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் விஷால் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

ஆர்.கே.நகர் தொகுதியில் மக்களுக்குத் தேவையான பணிகள் எதுவும் நடக்கவில்லை. அங்குள்ளவர்களுக்கு இந்த மனக்குறை இருக்கி றது. விஷால் இங்கு வெற்றி பெற்றால் நிச்சயம் நல்லது நடக்கும்என்று மக்கள் நம்புகிறார்கள். என்பின்னால் யாரும் இல்லை. இது மக்களுக்காக நான் எடுத்த முடிவு. நான் அரசியல்வாதி அல்லன். இந்தியக் குடிமகன் என்பதை அடையாளப்படுத்துவதற்காகவே ஆர்.கே.நகர் தொகுதியில் போட்டியிடுகிறேன்.

நான் யாருக்கும் போட்டி அல்ல. எதிரியும் அல்லன். ஆர்.கே.நகர் மக்களின் குரலை எதிரொலிப்பதற்காகவே இங்கு நிற்கிறேன். இளைஞர்கள் முடிவை யாரும் மாற்ற முடியாது. இன்றைய இளைஞர்கள் ஆதரவு நிச்சயம் எனக்கு இருக்கும். எந்த அரசியல் கட்சியும் சாராமல் மக்கள் பிரதிநிதியாக நிற்கிறேன். மாற்றத்தை தரும் தேர்தலாக இது அமையும். மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். எனவே இங்கு போட்டியிடுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

### ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தல்:

## டி.டி.வி.தினகரன் 1,500 கொடிகளுடன் வீதி வீதியாகப் பிரசாரம் செய்யத் திட்டம்

சென்னை,டிசெ.05

ஆர்.கே. நகர் தொகுதியில் தினகரன் இன்று முதல் பிரசாரத்தைத் தொடங்கவுள்ளார். அவர் வீதி வீதியாக ஆயிரத்து 500 கட்சிக் கொடிகளுடன் தீவிர பிரசாரத்தில் ஈடுபடவும் திட்டமிட்டுள்ளார். வீடு வீடாகச் சென்றும் வாக்கு சேகரிப்பில் ஈடுபடவுள்ளார்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் தினகரன் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். அவர் கடந்த முதலாம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

அவர் கறுப்பு, வெள்ளை, சிவப்பு நிறங்கள் அடங்கிய கொடியைப் பயன்படுத்தி வருகிறார். வேட்புமனுத் தாக்கலின் போது அவரது ஆதரவாளர்கள் அந்தக் கொடியுடனேயே வந்தனர். தொப்பிச் சின்னத்தைக் கேட்டுப் பெறும் முயற்சியிலும் தினகரன் ஈடுபட்டுள்ளார்.



ஆர்.கே.நகர் தொகுதித் தேர்தலை யொட்டி தினகரன் அணி ஆலோசனைக் கூட்டம் தண்டையார் பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் தினகரன் பங்கேற்கவில்லை. கூட்டம் நடந்த போது அவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள புயல் பாதிப்புகளைப் பார்வையிடச் சென்றிருந்தார்.

இந்த நிலையில் ஆர்.கே. நகர் தொகுதியில் தினகரன் இன்று முதல் பிரசாரத்தைத் தொடங்கவுள்ளார். அவர் வீதி வீதியாகச் சென்று தீவிர பிரசாரத்தில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளார். வீடு வீடாக சென்றும் வாக்கு சேகரிப்பில் ஈடுபடவுள்ளார்.

பிரசாரத்தின் போது தினகரன் கறுப்பு, வெள்ளை, சிவப்பு கொடியையே பயன்படுத்துகிறார். இதற்காக ஆயிரத்து 500 கொடிகள் தயார் நிலையில் உள்ளன.

ஆர்.கே.நகர் தொகுதியில் அதிக கூட்டங்களை நடத்தவும் அவர் திட்டமிட்டுள்ளார். இதற்காகப் பொது மக்களை அதிகஅளவில் அழைத்து வரவும் அவர் தனது ஆதரவு நிர்வாகிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது. (ப)

## மல்லையாவை நாடு கடத்தும் வழக்கு: லண்டனில் இறுதி விசாரணைகள்

தொழில் அதிபர் விஜய் மல்லையாவை இங்கிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு நாடு கடத்துவது தொடர்பான வழக்கின் இறுதி விசாரணை லண்டனில் நேற்று ஆரம்பமாகியது.

இந்தியாவின் பல்வேறு வங்கிகளில் இருந்து 9 ஆயிரம் கோடி ரூபா அளவுக்குக் கடன் வாங்கிய பிரபல தொழில் அதிபர் விஜய் மல்லையா, அவற்றைத் திருப்பி செலுத்தாமல் மோசடியில் ஈடுபட்டுள்ளார். அவர் மீது இந்தியாவின் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருக்கும் நிலையில், அவர் தற்போது இங்கிலாந்தில் தலைமறைவாக உள்ளார்.

அவரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புமாறு இங்கிலாந்து அரசை மத்திய அரசு கேட்டுக்கொண்டது. அதன்படி அவரை ஸ்கொட்லாந்து பொலிஸார் கடந்த சில மாதங்களுக்கு முன் கைது செய்தனர். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரை நாடு கடத்தக்கோரி லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் இறுதி விசாரணை நேற்று ஆரம்பமாகியது இந்த வழக்கு வருகிற 14ஆம் திகதி வரை தொடர்ந்து நடக்க உள்ளது. தலைமை நீதிமன்ற நீதவான் எம்மா லூயிஸ் அர்பத்னோட் முன்னிலையில் நடைபெறும் இந்த வழக்கு விசாரணைக்காக விஜய் மல்லையா நீதிமன்றில் ஆஜராக உள்ளார். இந்த வழக்கின் தீர்ப்பு அடுத்த ஆண்டு ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




## ஜெயலலிதாவிற்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன!

ஜெயலலிதாவிற்கும் சோபன் பாபுவிற்கும் குழந்தை பிறந்தது உண்மை. அதுவும் இரண்டு பிள்ளைகள். அவர்கள் இருவரையும் ஹைதராபாத்தில் வைத்துக் காப்பாற்றினார்கள். பின்னர் வெளிநாட்டில் திருமணம் செய்து கொடுத்து விட்டார்கள் என்று ஜெயலலிதாவின் அண்ணன் என அழைத்துக் கொள்ளும் வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

இவர் மைசூர் மாவட்ட ஸ்ரீரங்கபுராவில் வசித்து வருகிறார். எனது தந்தையின் இரண்டாவது மனைவியின் மகளாக இருந்தாலும் நான் ஜெயலலிதாவை சொந்தத் தங்கையாகவே நினைத்தேன் என்று கடந்த ஆண்டு ஜெயலலிதா மரணமடைந்தபோது கூறியிருந்தார்.

தற்போது ஜெயலலிதாவின் மகள் நான்தான் என்று வழக்கு தொடர்ந்துள்ளார் அம்ருதா. இதற்குஜெயலலிதாவின் உறவினர் களான ரஞ்சனி, லலிதாவும் உதவி வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழகத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ள வாசுதேவன்,



இரண்டு குழந்தைகள் ஜெயலலிதாவிற்கு பிறந்தன எனக் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில், ஜெயலலிதாவிற்கும் சோபன்பாபுவிற்கும் குழந்தை பிறந்தமை உண்மை தான். அந்தக் குழந்தைகளைக் ஹைதராபாத்தில் வைத்துத் தான் காப்பாற்றினார்கள். ஜெயலலிதாதான் அந்த இரு குழந்தைகளுக்கும் திருமணம் செய்து வைத்தார். அந்தப் பிள்ளைகள் தற்போதுஎங்கேஇருக்கின்றார்கள் என்று தெரியவில்லை என்று கூறியுள்ளார்.

மேலும், ஜெயலலிதாவிற்கு சென்னையில் பிரசவம் பார்த்தார்கள் என்று சொல்லுவது தவறான தகவல்; ஏனென்றால், ஜெயலலிதாஎங்கள் குடும்பஉறுப்பினர்கள் யாரோடும் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை.

ஜெயலலிதாவிற்குச் சோபன் பாபு மூலம் குழந்தைகள் பிறந்தன என்று சசிகலாவிற்கும், நடராசனுக்கும் நிச்சயம் தெரியும். இப்போது தீபா, தீபக், நானும் தான் ஜெயலலிதாவின் சொத்துக்களுக்கு வாரிசு என்றும் வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

தனது தம்பி மகளான தீபா தற்போது தன்னுடன் பேசுவதில்லை என்றும் வாசுதேவன் கூறியுள்ளார்.

# ஆப்கனில் தற்கொலைப் படைத் தாக்குதல் பெண்கள், குழந்தைகள் உட்பட ௬ பேர் சாவு



காபூல்,டிசெ.05

ஆப்கனிஸ்தானின் ஜலாலாபாத் நகரில் மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப்படைத் தீவிரவாதி நடத்திய தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானின் நாங்கார்ஹர் மாகாண தலைநகரான ஜலாலாபாத்தில் உள்ள உதைபந்து மைதானத்திற்கு வெளியே நேற்று முன்தினம் மாலை மோட்டார் பைக்கிளில் வந்த தீவிரவாதி, கூட்டமான மக்கள் பகுதி அருகே வந்து, தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்தான்.

இந்தக் கோரத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 6 பேர் பலியாகியுள்ளனர் என அம் மாகாண செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மேலும், 13 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்தத் தாக்குதல் நடைபெறுவதற்கு சில மணி நேரங்கள் முன்னர், மைதானத்தில் உள்ளே அரசு ஆதரவுக் கூட்டம் ஒன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாதத்தை ஒடுக்க பாக் எதுவுமே செய்யவில்லை

### அமெ. மீண்டும் அதிருப்தி



வொஷிங்டன்,டிசெ.05

பாகிஸ்தானில் தலைதூக்கி வரும் ஹக்கானி மற்றும் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்க அந்நாட்டு அரசு குறிப்பிடத்தக்க வகையில் எதுவுமே செய்யவில்லை என அதிபரின் வெள்ளை மாளிகையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார்.

தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக அளித்த வாக்குறுதியைக் காப்பாற்ற பாகிஸ்தான் தவறிவிட்டது. பாகிஸ்தானில் தலைதூக்கி வரும் ஹக்கானி மற்றும் தலிபான் தீவிரவாதிகளை உரிய வகையில் ஒடுக்குவதில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

ஓரிரவுக்குள் எல்லாவற்றையும் மாற்ற முடியாது சிறிது காலம் ஆகலாம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் அவர்களது மண்ணில் இயங்கிவரும் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகிறோம். குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறோம்.

ஆனால், அந்தத் திசையை நோக்கி எவ்வித குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் ஏற்படாததால் பாகிஸ்தானை மிகவும் நெருக்கமாகக் கண்காணித்தபடி இன்னும் நாங்கள் காத்திருக்கின்றோம்.

மும்பைத் தொடர் குண்டு வெடிப்பு தாக்குதலில் தொடர்புடைய ஹபீஸ் சயீதை விடுதலை செய்த பாகிஸ்தான் அரசின் முடிவானது தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற திசையை பொறுத்தவரை ஒரு பின்னடைவு என்று அமெரிக்கா கருதுகிறது என அந்த உயரதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## லொறி கவிழ்ந்து கோர விபத்து; ஸிம்பாப்வேயில் 21பேர் சாவு!

ஹராரே,டிசெ.05

ஸிம்பாப்வே நாட்டில் லொறி கவிழ்ந்த விபத்தில் சிக்கி 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஸிம்பாப்வே நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள ஷோலுட்ஷோ மாவட்டத்தில் லொறி ஒன்றில் 69இற்கும் மேற்பட்ட பயணிகள் நேற்றுமுன்தினம் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் லொறி தனது கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் லொறி கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. இந்த விபத்தில் அதில் பயணம் செய்த 21 பேர் உயிரிழந்தனர்.

தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அங்கு படுகாயம் அடைந்த 21பேரை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.



இது தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில், சம்பவ இடத்தில் 15 பேரும், மருத்துவமனையில் 6 பேரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.


(ப)

## 2020 ஆம் ஆண்டில் கல்லீரல் நோயால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் ஆபத்து

லண்டன்,டிசெ.05

2020ஆம் ஆண்டில் கல்லீரல் நோயின் மூலம் ஏராளமானோர் உயிரிழக்கும் ஆபத்து உருவாகும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

எய்ட்ஸ் மற்றும் புற்று நோய்க்கு அடுத்த படியாக இருதய நோய் உயிர்க்கொல்லி ஆக உள்ளது. இவற்றில் இருதய நோய் சாதாரண மாகப் பலரைத் தாக்கிப் பலி வாங்குகிறது.



இதைவிட மிகப்பெரிய உயிர்க் கொல்லி நோயாக கல்லீரல் நோய் சத்தமின்றி அமைதியாக உருவாகி வருகிறது. இதை சமீபத்தில் நடத்திய ஆய்வு தெரிவித்துள்ளது. அதிக அளவில் மதுகுடித்தல் மற்றும் உடல்பருமன் போன்றவைகளால் கல்லீரல் நோய் உருவாகிறது என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

2020ஆம் ஆண்டில் கல்லீரல் நோயின் மூலம் ஏராளமானோர் உயிரிழக்கும் ஆபத்து உருவாகும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அது இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்புகளை விட மிக அதிகமாக இருக்கும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## அபுதாபி அணுமின் நிலையத்தை நோக்கி ஏவுகணைத் தாக்குதல்

துபாய்,டிசெ.05

அபுதாபி நாட்டின் மேற்குப் பகுதியில் அமைக்கப்படும் பரக்கா அணு மின்சார நிலையத்தை நோக்கி நேற்று ஏவுகணைத்தாக்குதல் நடத்தினோம் எனக் ஹவுத்திப் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

ஏமன் நாட்டு அதிபர் அலி அப்துல்லா சாலே ஆட்சிக்கு முடிவு கட்டும் வகையில் அங்குள்ள ஹவுத்தி இன மக்கள் ஈரான் நாட்டின் ஆதரவுடன் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.







கடந்த மூன்றாண்டுகளாக அரசுப் படைகளுடன் ஹவுத்திப் புரட்சிப் படையினர் நடத்திவரும் மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அரசுப் படையினருக்கு சவுதி அரேபியா தலைமையிலான இஸ்லாமியப் படைகள் ஆதரவளித்து வருகின்றன.

ஹவுத்திப் புரட்சிப் படையினரை விமானத் தாக்குதல் மூலமாக வேட்டையாடும் பணியில் சவுதி தலைமையிலான ஐக்கிய அரபு அமீரக கூட்டுப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். ஹவுத்தி படைகளுக்கு எதிராக ஏமன் நாட்டுத் தலைநகரான சனா நகரில் தற்போது உச்சகட்டப் போர் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், அபுதாபி நாட்டின் மேற்குப் பகுதியில் அமைக்கப்படும் பராக்கா அணு மின்சார நிலையத்தை நோக்கி ஏவுகணை வீசித் தாக்குதல் நடத்தினோம் என ஹவுத்திப் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

சவுதி அரேபியா நாட்டின் எல்லையோரம் அபுதாபி நாட்டின் மேற்கில் உள்ள பாலைவனப் பகுதியில் 2 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டு வரும் அணு மின்சார நிலையத்தை நோக்கி ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தினோம் எனத் தெரிவித்துள்ள ஹவுத்திப் போராளிகளின் அறிக்கைக்கு அபுதாபி மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் தரப்பில் மறுப்போ, விளக்கமோ இன்னும் அளிக்கப்படவில்லை.





# வெலிங்டன் டெஸ்ட்: வோக்னரின் வேகத்தால் நியூஸி. இன்னிங்ஸ் வெற்றி

மேற்கிந்தியத் தீவு அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் வெலிங்டனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி களத் தடுப்பைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் களம் இறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வோக்னரின் அபாரப் பந்து வீச்சால் 134 ஓட்டங்களில் சுருண்டது. மேற்கிந்தியத் தீவு அணியின் தொடக்க வீரர் பொவேல் 42ஓட்டங்கள் சேர்த்தார். வேக்னர் 7 விக்கெட்டுக்களை சரமாரியாக வீழ்த்தினார்.

பின்னர் நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. மேற்கிந்தியத் தீவு அணியின் பந்துவீச்சைச் சிதறடித்து கிராந்தோம் 105 ஓட்டங்களும், பலுண்டெல் 107 ஓட்டங்களும் குவித்தனர். மேலும், டெய்லர் 93 ஓட்டங்கள் எடுக்க நியூஸிலாந்து அணி 520 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் பரத்வெய்ட் (91 ஓட்டங்கள்), பாவல் (40ஓட்டங்கள்), ஷிம்ரோன் (66 ஓட்டங்கள்) மற்றும் ஹோபி (37 ஓட்டங்கள்) ஆகியோர் சிறப்பான தொடக்கம் கொடுத்தாலும், பின்கள வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தமையால் அந்த அணி 319 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால், நியூஸிலாந்து அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# பண்டையாவைக் கைது செய்ய வந்த பொலிஸார்!



இந்திய அணியில் வளர்ந்து வரும் வீரரான ஹார்திக் பண்டையா மேற்கிந்தியத் தீவில் பொலிஸார் தன்னை கைது செய்ய வந்தனர் எனக் கூறியுள்ளார்.

இந்திய அணியில் தற்போது நீக்க முடியாத வீரராக ஹார்திக் பண்டையா உள்ளார். தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் தனக்கு என்று ஒரு ரசிகர் பட்டாளத்தை அவர் கொண்டுள்ளார்.

இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஓய்வில் இருக்கும் ஹார்திக் பண்டையா, தனியார் நிகழ்ச்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில், நானும் மேற்கிந்தியத் தீவு வீரர் பொலார்ட்டும் நண்பர்கள். நான் ஐ.பி.எல். தொடரில் விளையாடும் போது அவர் நிறைய ஆலோசனைகள் வழங்குவார்.

இதைத் தொடர்ந்து நான் மேற்கிந்தியத் தீவு சென்ற போது, அவர் என்னைத் தனியாக விடவில்லை, அவரே எல்லா இடத்துக்கும் அழைத்துச் சென்றார். அவருடனேயே என்னை எப்போதும் வைத்துக்கொண்டார்.

ஒரு நாள், அவர் பொலிஸ் அதிகாரியை அழைத்தார். அவர் என்னைக் கைது செய்ய வந்தார். எனக்குதிக் என்றது. இந்திய அணியை தொடர்பு கொள்ள நினைத்தேன். தவறு ஏதும் பண்ணவில்லை, ஏன் என்னை கைது செய்ய வேண்டும் என்று குழம்பினேன், பிறகு தான் தெரிந்தது, அந்த அதிகாரி பொலார்ட்டின் நண்பர், அது என்னை ஏமாற்ற செய்யப்பட்ட நாடகம் என்பது பிறகு தெரிந்தாலும் நான் பயந்தமை உண்மைதான் என்று கூறியுள்ளார்.

# கூட்டுறவு சங்கங்களின்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனைய நிறுவனங்களுக்கில்லாத தனிச் சிறப்புகளும் உயர்கொள்கைகளும் கூட்டுறவுச் சங்கங்களிடம் காணப்படுகின்றன.

1972 ஆம் ஆண்டு பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் யாவும் மறுசீரமைத்து முடிந்ததும் 1972 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த கூட்டுறவுச் சட்டங்கள் யாவும் ரத்துச்செய்யப்பட்டன.

இச் சட்டங்களிலுள்ள தேவையான சில அம்சங்களை உள்ளடக்கி, புதிய பல அம்சங்களையும் சேர்த்து 1972 இல் 5 ஆம் இலக்க புதிய கூட்டுறவுச்சட்டம் நாடாளுமன்றால் உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் மறு சீரமைக்கப்பட்டன. அத்துடன் பல்வேறு மாற்றங்களுக்கும் உள்ளாகின.

இதனைத் தொடர்ந்து, அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனத் தினதும் மாவட்டங்கள் தோறும் இயங்கிய மாவட்ட கூட்டுறவுச் சமாசங்களதும் பதிவுகள் யாவும் ரத்து செய்யப்பட்டு அவற்றின் சொத்துக்களையும் பணியாளர்களையும் உள்ளடக்கியதாக இலங்கை தேசிய கூட் டுறவுச் சபை என்ற தேசிய ரீதியிலான கூட்டுறவுக் கோட்பாட்டு நிறுவனம் 1972 இல் உருவாக்கப்பட்டது.

இதன் தோற்றத்தைத் தொடர்ந்து அதே ஆண்டு 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் சட்டம் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டதை அடுத்து கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இயன்றளவு உச்சப்பயனைப் பெறுவதற்கும் என கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

**வடமாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சமகாலச் செல்நெறி**

வட மாகாணத்திலுள்ள 05 மாவட்டங்களிலும் மொத்தமாக 114 சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன்படி, யாழ்.மாவட்டத்தில் 54 சங்கங்களும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் முறையே 17,17, 16,10 சங்கங்களுமாக மொத்தம் 114 சங்கங்கள் இயங்கி வருகின்றன.

முன்னர் வட மாகாணத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் சிறப்பாக வளர்ச்சியடைந் திருந்தன. பல்வேறு நோக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப் பட்டு வினைத்திறனான முறையில் இயங்கி வந்ததுடன், இலாப மீட்டிய துறையாகவும் இக்கூட்டுறவுத்துறை விளங்கியது. தற்போதுள்ள சூழ்நிலையில் கூட்டுறவுத் துறை பல்வேறு சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வருகிறது.

எனவே, நலிவடைந்து சென்று கொண்டிருக்கும் கூட்டுறவுத் துறையை தூக்கி நிறுத்த வேண்டிய பெரிய பொறுப்பு அரசு, மக்களின் கைகளிலேயே இருக்கிறது. கூட்டுறவு அமைப்புகள் யாவும் கிராமிய பொருளாதாரத்தை வளப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். ஏனைய துறைகளைப் போலவே கூட்டுறவுத் துறையிலும் மாற்றங்களைச் செய்யவேண்டும்.

ஆக, மொத்தத்தில் வடமாகாணத்தில் இயங்குகின்ற சகல கூட்டுறவுச் சங்கங்களும் வினைத்திறனான சேவைகளை மக்களுக்கு வழங்குவதுடன் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் தன்னலமற்ற சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும். ஊழல், மோசடிகள், வெளிச் சக்திகளின் தேவையற்ற தலையீடுகள் என்பவற்றுக்கு இடமளிக்காது ஊழியர்கள் அனைவரும் பொது நோக்குடன் ஒருமித்த சிந்தனையுடன் செயற்படவேண்டும்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற முதுமொழி இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. மக்கள் உருவாக்கிய நிறுவனங்களுள் கூட்டுறவுச் சங்கங்கள் உயர்ந்த கொள்கைகளையும் சிறப்பியல்புகளையும் உடைய தனிச் சிறப்பு வாய்ந்த நிறுவனங்களாகும். அந்தவகையில், வட மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் நிறுவனங்களாக ஜனநாயக முறைப்படி இயங்கி, மக்களுக்கு மகத்தான சேவையை வழங்க முன்வரின், கூட்டுறவுத் துறையை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்லமுடியும்.

- ஸ்ரீ நதிபரன்

# இந்தியா பகல் - இரவு டெஸ்டுக்கு சம்மதிக்கும் – ஆஸி. நம்பிக்கை



இந்தியா அடுத்த முறை ஆஸ்திரேலியா வரும் போது பகல் - இரவு டெஸ்ட் போட்டியில் கண்டிப்பாக விளையாடும் என ஆஸ்திரேலியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் போட்டி முதன்முதலாக டெஸ்ட் ஆட்டங்களாக மட்டுமே நடைபெற்றது. அதன்பின் ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ரி-20 கிரிக்கெட் போட்டியால் டெஸ்ட் போட்டிக்கான வரவேற்பு வெகுவாகக் குறைந்துள்ளது.

பாரம்பரியமான டெஸ்ட் போட்டி அழிந்துவிடக் கூடாது என்பதில் முன்னணி கிரிக்கெட் அணிகள் விரும்புகின்றன. ஐந்து நாள்கள் செலவழித்து தற்போது போட்டியை ரசிகர்கள் பார்க்க விரும்பாததால், பகல் - இரவுப் போட்டியாக நடத்த ஆலோசிக்கப்பட்டது.

பகல் - இரவு போட்டியாக நடத்தினால் வேலை முடிந்தபின்னர், ரசிகர்கள் மைதானம் வந்து போட்டியைக் காணலாம் என்பதால், முதன்முதலாக ஆஸ்திரேலியா பகல் -இரவு டெஸ்ட் போட்டியை நடத்த முயற்சி எடுத்தது. பல்வேறு சோதனைகளுக்குப் பிறகு கடந்த 2015,2016இல் ஆஸ்திரேலியா-நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் பகல் - இரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடிலெய்டில் நடைபெற்றது. இந்தப் போட்டிக்கு ரசிகர்களின் ஆதரவு அதிக அளவில் இருந்தது.

அதன்பின் பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவு, இலங்கை அணிகள் பகல்- இரவு டெஸ்ட் போட்டியில் விளையாடிவிட்டன. ஆனால், இந்தியா மட்டும் இன்னும் பகல் - இரவு டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை.

இந்த நிலையில், அடுத்த முறை இந்திய அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்யும் போது கண்டிப்பாக பகல் -இரவு டெஸ்டில் விளையாடும். ஆஸ்திரேலியாவின் வேண்டுகோளை இந்திய கிரிக்கெட் சபை ஏற்கும் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் சுதர்லேண்ட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## டில்லி டெஸ்ட்:

# வலுவான நிலையில் இந்தியா தடுமாற்ற நிலையில் இலங்கை



இந்தியா – இலங்கை இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில்வென்றுமுதலில்துடுப்பாட்டம் செய்த செய்த இந்திய அணி 7 விக்கெட்இழப்பிற்கு536ஓட்டங்கள் குவித்து முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது. விராட் கோஹ்லி 243 ஓட்டங்களும், முரளி விஜய் 155 ஓட்டங்களும் குவித்தனர்.



பின்னர் இலங்கை அணி முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. நேற்று முன்தின 2ஆவது நாள் ஆட்ட முடிவில் இலங்கை 3 விக்கெட் இழப்பிற்கு 131 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மத்தியூஸ் 57 ஓட்டங்களுடனும், சந்திமல் 25 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. மத்தியூஸ், சந்திமல் ஆகியோர் மிகவும் சிறப்பாக விளையாடினார்கள். இதன் காரணமாக இருவரும் சதம் அடித்தனர். மத்தியூஸ் 111ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்வினின் சுழலில் ஆட்டம் இழந்தார். மத்தியூஸ் – சந்திமல் ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு 181 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டது. 5ஆவது விக்கெட்டுக்குச் சந்திமல் உடன் சமரவிக்ரமா ஜோடி சேர்ந்தார். 113 ஓவர்கள் முடிவில் இலங்கை 4 விக்கெட் இழப்பிற்கு 305 ஓட் டங்கள் எடுத்தது .

தொடர்ந்து களம் இறங்கிய சதீர 61 பந்துகளை எதிர் கொண்டு 33 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இசாந் சர்மாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் இறங்கிய றோஷான் சில்வா டிக்வெல்ல ஆகியோர் அஸவினின் சுழலில் ஓட்டங்கள் எதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். இவர்களின் ஆட்டமிழப்போடு இலங்கையின் தடுமாற்றம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து களம் இறங்கிய லக்மல் மொகமட் சமியின் வேகத்தில் 5 ஓட்டங்களுடன் ஆட்மிழந்தார். அவரைத்தொடர்ந்துகளம்இறங்கிய லகிரு கமே வந்த வேகத்தில் ஒரு ஓட்டத்துடன்பவிலியன்திரும்பினார்.

தொடர்ந்து களம் இறங்கிய சண்டகன் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும் சந்திமல் 147 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந்தியஅணிசார்பாகஅஸவின் 3 விக்கெட்டுகளும், ஐடேஜா 2 விக்கெட்டுகளும், இசாந் சர்மா 2 விக்கெட்டுகளும், மொகமட் சமி 2 விக்கெட்டுகளும் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் இலங்கை 9 விக்கெட் இழப்புக்கு 356 ஓட்டங்களைப் பெற்று மொத்தம் 180 ஓட்டங்கள் பின் நிலையில் இருந்தது.

## ஆஷஸ் அடிலெய்ட் பகல் - இரவு டெஸ்ட்:

# இங்கிலாந்து 227 ஓட்டங்களில் சுருண்டது அதிரடியைத் தொடங்கியது ஆஸ்திரேலியா



ஆஷஸ் தொடரின் அடிலெய்டு பகல் – இரவு டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் இங்கிலாந்து 227 ஓட்டங்களில் சுருண்டது.

ஆஸ்தொடரின்2ஆவது டெஸ்ட் அடிலெய்டில் நடைபெற்று வருகிறது. பகல் – இரவு டெஸ்டாக நடைபெற்று வரும் இதில், நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி கப்டன் ஜோ ரூட் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் களம் இறங்கிய ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்பிற்கு 442 ஓட்டங்கள் குவித்து முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது. வோர்னர் (47), கவாஜா (53), ஸ்மித்(40), ஆட்டமிழக்காமல் ஷேன் மார்ஷ் (126), கம்மின்ஸ் (44), பெய்ன் (57) சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. நேற்றுமுன்தினம் 2அவது நாள் ஆட்ட முடிவில் 1 விக்கெட் இழப்பிற்கு 29ஓட்டங்கள் எடுத்திருந்தது. குக் 11 ஓட்டங்களுடனும், வின்ஸ் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. குக், வின்ஸ்ஆட்டத்தைத்தொடங்கினார். ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சைத்தாக்குப்பிடிக்க முடியாமல் இங்கிலாந்து வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். வின்ஸ் 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹசில்வுட் பந்தில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த கப்டன் ஜோ ரூட் 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கம்மின்ஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். மறுமுனையில் ஓரளவிற்கு தாக்குப்பிடித்து விளையாடிய குக் 37 ஓட்டங்கள் எடுத்த நிலையில் லயன் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த மொயீன் அலி 23, மலன் 19, பேர்ஸ்டோவ் 21, கிறிஸ் வோக்ஸ் 36, ஓவர்டன் 41 ஓரளவிற்கு தாக்குப்பிடித்து விளையாட இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 227 ஓட்டங்களுடன்சுருண்டது. ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்டார்க் 3விக்கெட்டும், நாதன்லயன் 4 விக்கெட்டும், கம்மின்ஸ் 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

இங்கிலாந்து 227 ஓட்டங்களுடன் சுருண்டதால் ஆஸ்திரேலியாவை விட முதல் இன்னிங்ஸில் 215 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது. 200 ஓட்டங்களுக்கு மேல் முன்னிலை பெற்றாலும் ஆஸ்திரேலியா பலோ–ஒன் கொடுக்காமல் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது.

பன்கிராப்ட், வோர்னர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பான்கிராப்ட் அண்டர்சன் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து கவாஜா களம் இறங்கினார். 13 ஓவர்கள் முடிவில் ஆஸ்திரேலியா 1 விக்கெட் இழப்பிற்கு 32 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

(ப)



# வீரர்களின் பாதுகாப்பு முக்கியம்

## – நிக் போத்தாஸ்

இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதி வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டி, காற்று மாசு காரணமாக நேற்று முன்தினம் தடைபட்டது. இந்த நிலையில், வீரர்களின் பாதுகாப்பு முக்கியம் என இலங்கைப் பயிற்சியாளர் நிக் போத்தாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த இந்தியா, இலங்கை டெஸ்ட் போட்டியில், காற்று மாசு காரணமாக ஆட்டம் சில நேரம் பாதிக்கப்பட்டது. இலங்கை வீரர்களில் சிலர் முகக்கவசம் அணிந்து கொண்டு தொடர்ந்து விளையாடினர்.

ஆனால், இலங்கை வீரர்கள் சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்படவே, முன்னதாகவே இரண்டாம் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், இலங்கைப் பயிற்சியாளர் நிக் போத்தாஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

டில்லியில் காற்று மாசு பற்றி எல்லோருக்கும் தெரியும். வீரர்கள் ஆடுகளத்தில் மூச்சு விடச் சிரமப்பட்டனர்.

வழக்கமான சீதோஷ்ண நிலை இல்லாததால் வீரர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். உடை மாற்றும் அறைக்குத் திரும்பிய லக்மல், கமகே, தனஞ்செயா ஆகியோர் தொடர்ந்து வாந்தி எடுத்துக் கொண்டே இருந்தனர்.

பின்னர், மருத்துவர்கள் அவர்களுக்குச் சிகிச்சை அளித்தனர். இந்தப் பிரச்சினை கிரிக்கெட்டிற்குப் புதிது. அதனால் என்ன செய்ய வேண்டும் என்பதனை நடுவர்களிடமே விட்டுவிட்டோம்.

நாங்கள் இங்கு கிரிக்கெட் விளையாடதான் வந்துள்ளோம். அதை நிறுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை. மேலும், வீரர்களின் பாதுகாப்பும் முக்கியம் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் டில்ருவான் பெரேரா புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

இலங்கை – இந்தியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி டில்லியில் நடைபெற்றது.

இதில் முதல் இன்னிங்ஸில் இந்தியா 7 விக்கெட்கள் இழப்புக்கு 536 ஓட்டங்கள் எடுத்தது. இதில் இந்திய துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவானின் விக்கெட்டை இலங்கைச் சுழற்பந்து வீச்சாளர் பெரேராவீழ்த்தினார்.

இது அவரின் நூறாவது விக்கெட்டாகும். இதன் மூலம் இலங்கை அணி சார்பில் வேகமாக 100 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற பெருமையைப் பெரேரா பெற்றுள்ளார்.

இலங்கை ஜாம்பவான்களான முரளிதரன், சமிந்த வாஸ் போன்றோர் கூட இதைச் செய்யாத நிலையில் வெறும் 25 போட்டிகளில் விளையாடி பெரேரா இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.



# முரளி செய்யாததை செய்தார் பெரேரா

## பிரபாகரனுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம்நேற்று பதுளைவின்சன்ட் டயஸ் மைதானத்தில் நடைபெற்றது. இதனை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆரம்பித்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விடுதலைப்புலிகளின்தலைவர் பிரபாகரனிடம் மண்டியிடாமல் அந்த அமைப்பைத் தோற்கடித்த நான், சமகால அரசின் அரசியல்வாதிகள் முன்னிலையில் மண்டியிடமாட்டேன்.

நல்லாட்சி அரசு கடும் போக்குமற்றும் அதிகாரபோதையில் செயற்படுகிறது. அவ்வாறு செயற்படவேண்டாம். எமது பயணத்தை முடக்குவதற்குப் பல வழிகளிலும் சிலர் முயற்சிக்கின்றார்கள். அது நடக்காது. மக்களின்பலம்எமக்குஉள்ளவரை யாரும் எம்மைத் தோற்கடிக்க முடியாது.

இந்தத்தேர்தலில்எமக்குள்ள மக்கள் பலம் நிரூபிக்கப்படும். மக்கள் இப்போதும் எம்முடனேயே உள்ளனர். எதற்கும் அஞ்சாமல் நாம் வெற்றிநடை போடுவோம்.

அதிகார மமதையில் செயற்பட்டுவரும் நல்லாட்சி அரசு, எம்மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ஆயினும் அதற்கு நாம் அஞ்சிவிடமாட்டோம் – ஓடி ஒளிக்கமாட்டோம். தொடர்ந்து மக்களுடன் பயணிப்போம் – என்றார்.

இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் மஹிந்தவின் படங்களைத் தாங்கியவாறு பங்கேற்றனர். மஹிந்தஉரையாற்ற எழுந்தபோது அங்கு பெரும் கரகோசம் எழுந்தது. அது பல நிமிட நேரம் நீடித்தது. இந்தக் கூட்டத்தில், கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## பெப்.17 இற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

இன்றுவரை 248 உள்ளூராட்சிச் சபைகளில் வேட்பு மனுக்களை வெளியிடுவதற்கு எந்த வித தடைகளும் இல்லை. 97 சபைகளில் இருந்த அச்சுப் பிழைகள் காரணமாக மீண்டும் அந்தச் சபைகளை வர்த்தமானியில் உள்ளடக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவை கடந்த 2 ஆம் திகதி ஜனாதிபதியின் கையொப்பத்துடன் மீண்டும் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேர்தல் நடைபெறும் தினம் ஞாயிறு அல்லது அரச விடுமுறையாக அல்லாத ஒரு தினத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தலுக்கு 75 நாள்கள் உள்ள நிலையில் அந்த காலப் பகுதியில் பரீட்சைகளில் தோற்றுபவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்–என்றார். (ஐ)

## கடற்றொழிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

தற்போது எதிர்பார்க்கப் படும் சீரற்ற காலநிலையின் காரணமாக வடக்கு–கிழக்கு பிரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபடுவது பாதுகாப்பற்றதாகும். இந்தச்சீரற்ற காலநிலையைக்கரையோரப் பிரதேசத்திலுள்ள மக்களும் கடற்றொழிலில் ஈடுபடுவோரும் எதிர்கொள்ள தயார் நிலையில்இருக்கவேண்டும்என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தத் தகவல்களைப் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் ஊடாகச் சம்பந்தப்பட்ட கரையோர மற்றும் கடற்றொழிலாளர் சமூகத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் கடற்றொழில் மற்றும் கடல் நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கும் இவ்வாறான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இன்று முதல் மறு அறிவித்தல் வரும்வரை கடல் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என்று வடக்கு இடர்முகாமைத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## அம்பகமுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சார்பில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அம்பகமுவ பிரதேச சபைக்கான எல்லையை நிர்ணயிக்கும்போது சிவனொளிபாத மலைப் பகுதி பிரிவடைந்துள்ளதாகவும், அதனால் பக்தர்களுக்குப் பாதிப்புஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர்மனுவில்குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு இந்த வாரம் விசாரணைக்கு எடுக்கப்படலாம் அல்லது உயர் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால் அம்பகமுவ பிரதேச சபைக்கான தேர்தல் தாமதமாகலாம் எனவும் கூறப்பட்டது. (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு – செலவுத் திட்டம் மீதான மூன்றாவது வாசிப்பு நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

போஷாக்குக்குறைப்பாட்டில் கிளிநொச்சி மாவட்டமே முதலாவதாக காணப்படுகிறது. சுகாதாரத்தில் உள்ள குறைபாடுகளே இந்த மக்களுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. என்றாலும், சுகாதார அமைச்சர் சில நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் மயக்க மருந்து நிபுணர்கள் இல்லை. தெல்லிப்பழை, முல்லைத்தீவு, வைத்திய சாலைகளிலும் இதே குறைபாடுகள் உள்ளன. அத்துடன், பருத்தித்துறை வைத்தியசாலையில் மகப்பேற்று, மயக்க மருந்து நிபுணர்கள் குறைபாடுகள் காணப்படுகின்றன. பல காலமாக உள்ள இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்படாது உள்ளன.

யாழ். மாவட்டத்தில் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவுவைத்தியசாலைகளிலும் குறைபாடுகள் உள்ளன. அங்குள்ளமக்கள்பாவப்பட்டவர்களாக வாழ்கின்றனர். நெடுந்தீவு எட்டு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய தீவு. ஒரு பாம்புக்கடி ஏற்பட்டால்கொண்டு வரப் படகுச்சேவை கூட முறையாக இல்லை. எனவே, குறித்த வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் தேவையை சீராக்க வேண்டும். இவ்வாறான அடிப்படையான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள அதிகாரம் இல்லைஎன்பதுதான்தமிழர்கள் சமஷ்டியைக் கோரக் காரணம்–என்றார்.

## வறியவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினதும் சுகாதார, சுதேச மருத்துவத் துறை அமைச்சினதும் வரவு – செலவுத் திட்டம் மீதான மூன்றாவது வாசிப்பு நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

நாட்டு மக்களின் இலவச சுகாதார உரிமையை வெற்றி கொள்வதற்கு தற்போதைய அரசு முக்கியமான பணிகளை நிறைவேற்றியுள்ளது.

இலவச சுகாதார சேவைக்காகச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இன்றைய சுகாதார அமைச்சருக்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது. அன்று ஔடத சட்டத்தை நிறைவேற்றுகின்றபோதும் புகையிலைச் சட்டத்தை கொண்டு வருகின்ற போதும் சுகாதார அமைச்சர் என்ற வகையில் நான் சவால்களை எதிர்கொண்டேன்.

சுகாதார அமைச்சருக்கு மட்டுமன்றி அனைத்து அமைச்சர்களுக்கும் இன்று தமது துறையில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு ஜனாதிபதி என்ற வகையில்எனது ஆசீர்வாதம் உண்டு– என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலும் சுயாதீனக் குழுக்கள் சுயேச்சைகளாகக் களமிறங்கத் திட்டமிட்டுள்ளன.

அதேவேளை வாக்கு வங்கிகளைச் சிதைக்க சுயேச்சைகளைக் களத்திலிறக்கப் பெரிய கட்சிகள் சில ஏற்பாடுகளில் குதித்துள்ளமையும் கசிந்துள்ளது.

இதனிடையே கட்சிகளின் மீது மக்களுக்கிருக்கும் அதிருப்திகளையும் சலிப்பையும் நம்பிக்கையீனத்தையும் இந்தச் சுயேச்சைகள் பயன்படுத்திக் கொள்ள விளைகின்றனவென அரசியல் அவதானியொருவர் கருத்து வெளியிட்டார்.

இந்தச் சுயேச்சைகள் குறிப்பிடத்தக்க சபைகளில் வெற்றியடைந்தால், அவற்றுக்கிடையில் ஓர் இணைப்பு நடைமுறையில் உருவாகும். அது பின்னர் ஒரு புதிய அரசியற் தொடக்கத்துக்கான சிந்தனையையும் புரிதலையும் உண்டாக்கும்.

இதுவரை கிடைத்த தகவல்களின்படி வடக்கிலும் கிழக்கிலும் பல சுயேச்சைக் குழுக்கள், சுயாதீனமாகக் களமிறங்கப்போவதாகத் தெரிகிறது.

இவை எந்த அரசியற் தரப்பின் பின்னணியும் இல்லாமல் தனியே – மக்கள் நலனை மட்டுமே முன்னிலைப்படுத்திச் செயற்படவுள்ளதாக அறிவித்திருக்கின்றன.

வல்வெட்டித்துறை நகர சபைத் தேர்தலில் பலமிக்க சுயேச்சை குழுவொன்று களமிறங்குவது முடிவாகியுள்ளது. தேசியத்தலைவரின்நெருங்கிய நண்பர் ஒருவர் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் அவரை முன்னிறுத்தித் தேர்தலில் குதிக்க முடிவாகியுள்ளது.

முன்னதாகக் கூட்டமைப்பு வசமிருந்த வல்வெட்டித்துறை நகரசபை குழப்பங்கள் கூச்சல்களுடன் நீண்ட காலமாகச் செயற்படமுடியாதும் இருந்திருந்தது. அதே போன்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உள்ளிட்ட பலவற்றில் சுயேச்சை அணிகள் தயாராகிவருகின்றன எனத் தெரியவருகின்றது. (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவி கோரிய ஐந்து மீனவர்களை ஈரானிய எண்ணெய்க் கப்பல் காப்பாற்றியது.

கடும் மழைக்கு மத்தியில் மீனவர்களை மீட்கும் போராட்டம் ஐந்து மணி நேரம் நீடித்ததாக, ஸ்ட்ரீம் என்ற எண்ணெய் தாங்கிக்கப்பலின்தலைவர்மஹ்மூத் பக்கெஸ்தானி தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் பாதுகாப்பாகவும், பேசக் கூடிய நிலையிலும் இருப்பதாகவும், நாளை இவர்களை சபஹார் துறைமுகத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும், அவர் கூறினார்.

இந்த மீனவர்கள் 2–3 நாள்களாகக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்துள்ளனர். தெஹ்ரானில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள், மீட்கப்பட்ட மீனவர்களை அடையாளம் காணும் முயற்சியில்இறங்கியுள்ளனர். (ஐ)

## மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றித் தெரியவருவதாவது:

மன்னார் தாழ்வுபாடு கிராம மீனவர்கள் நேற்றுக் காலை வழமைபோல் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றுள்ளனர். அந்த மீனவர்கள் தமது பாரம்பரிய தொழிலாகக் கடந்த 30 வருடங்களுக்குமேலாகச்சுருக்குவலையைப்பயன்படுத்திவருகின்றனர்.

தொழிலுக்குச் சென்ற மீனவர்களில் 5 படகுகளைச் சேர்ந்த 25 மீனவர்களைக் கடற்படையினர் கடலில் வைத்துக் கைது செய்து தாழ்வுபாட்டுக் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

மீனவர்கள்கைதுசெய்யப்பட்டதை அறிந்த தாழ்வுபாட்டுக் கிராமமக்கள்அனைவரும்ஒன்று திரண்டு கடற்படை முகாமை நோக்கிச் சென்றனர். அங்கு மீனவர்களின் கைது தொடர்பில் தமதுஎதிர்ப்பைதெரிவித்ததோடு அவர்களை விடுதலை செய்யுமாறுகோரிபோராட்டம்நடத்தினர்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதியைச் சூழ்ந்து கொண்டமையால்அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. உடனடியாக மன்னார் பொலிஸார் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள்சம்பவ இடத்துக்குவந்து மக்களுடன்கலந்துரையாடினர்.

எனினும் கடற்படையினர் கைது செய்த 25 மீனவர்களையும் உடனடியாக விடுவிக்குமாறும், விடுவிக்காத பட்சத்தில் கடற்படைமுகாமைவிட்டுத்தாம் கலைந்துசெல்லப்போவதில்லை எனவும் மக்கள் தெரிவித்ததை அடுத்து அங்கு பதற்ற நிலை மேலும் வலுவானது.

சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் பொலிஸார் கிராம மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் கைது செய்யப்பட்ட 25 மீனவர்களையும் கடற்படையினரிடம் இருந்து பொறுப்பேற்று மன்னார் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

இந்த மீனவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் கூறினர்.

மன்னாரில் பல பிரதேசங்களில் தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழில்கள் இடம் பெறுகின்றபோதும் தாழ்வுபாட்டுப் பிரதேசத்தில் மாத்திரம் ஏன் கடற்படையினர் இவ்வாறான கைது நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஐ)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவடக்குமாகாணமுதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் அண்மையில்தெரிவித்திருந்தார். இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

இலங்கையில் 74 சதவீதமான சிங்களவர்களும் இவர்களில் 85 சதவீதமானவர்கள் பௌத்தர்களாகவும் உள்ளனர். ஆகவே இது ஒரு பௌத்த நாடு.

ஆரம்பகாலத்தில் இலங்கையின் பெயர் சிங்கலே என்பதாகும். 1815 இல் பிரித்தானியத் தலைவர்களாலும் சிங்கலே தலைவர்களாலும் கண்டிய சாசனம் எழுதப்பட்டது.

எமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் 'சிங்கலே' என்ற பெயரைத் தொடர்ந்தும் பயன்படுத்தி இருந்தால் இந்த நாட்டிலுள்ள அனைவரும் சிங்களவர்களாக இருந்திருப்பார்கள்.

ஆகவே எமது நாடானது சிங்கள பௌத்த நாடு என அழைக்கப்படுவதை எவரும் எதிர்க்க முடியாது.

சிங்களவர்கள் வடக்கில் குடியேறுவதை முதலமைச்சர் விக்னேஸ்வரன் விரும்பவில்லை, அதேநேரம் யாழ்ப்பாணத்திலுள்ள புத்தர் சிலைகளை அகற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் கொழும்பிலுள்ள சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். இதுவே ஒரு முஸ்லிம் நாடொன்றில் வாழும் முல்லாக்களை முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் இவ்வாறு துன்பப்படுத்தி இருந்தால் அவரது தலை துண்டிக்கப்பட்டிருக்கும்.

ஆனால், இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை விக்னேஸ்வரன் அறிந்துள்ளார். அதனால் தான் அவர் தனது அதிருப்திகளைப் பரவலாக வெளியிட்டு வருகிறார்.

பௌத்தர்கள் ஏனைய மதங்களை மதிக்கின்றனர். இதன் காரணமாகவே இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன. நல்லிணக்கத்தை விக்னேஸ்வரன் போன்றவர்கள் அழிக்க முயற்சிக்கிறார்கள்–என்றார் (ஐ)

## தாவரவியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்தைப் புனரமைப்பதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும்அண்மையில்கனகபுரம் துயிலும் இல்லப் புனரமைப்புப்பணிபிரதமர்ரணிலின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கரைச்சிப் பிரதேச சபை துயிலும் இல்லத்தை தாவரவியல் பூங்காவாகப் பொறுப்பேற்ற நிலையிலேயே இந்தப் பெயர்ப் பலகை நடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்தநவம்பர் 27ஆம்திகதிகிளிநொச்சிகனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர் தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடமாகாணத்தில் பொலிஸாருக்கு எதிராக பொதுமக்களால் 48 முறைப்பாடுகள்!

## யாழ் செயலகத்தில் பதிவு செய்யலாம்

கொழும்பு, டிசெ. 05

வடக்கு மாகாணத்தில் பொலிஸாருக்கு எதிராக பொது மக்களால் கடந்த 11 மாதங்களில் 48 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன அதில் 39 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வட மாகாண பணிப்பாளர் எஸ். சண்முகரட்ணம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு எதிரான முறைபாடுகளைப் பதிவு செய்வது தொடர்பில் வடக்கு மக்களுக்கு போதியளவு விழிப்புணர்வு இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் பொலிஸாருக்கு எதிராக பொலிஸ் சேவை ஆணைக் குழுவில் 26 முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டு அதில் 20 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. மிகுதி 6 முறைப்பாடுகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வருடம் நடப்பாண்டில் பொலிஸாருக்கு எதிராக 48 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு அதில் 39 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

ஏனையவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், பொது மக்களுக்கு பொலிஸாரால் ஏதாவது அநீதிகள் இழைக்கப்பட்டால் அது தொடர்பாக முறையிட்டு அவற்றுக்கு நியாயம் தேடும் அளவுக்கு வடக்கு மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு காணப்படவில்லை.

அதற்காகத் தற்போது பிரதேச செயலகங்கள் தோறும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொலிஸாரால் பொதுமக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் பொதுமக்கள் அது தொடர்பாக முறைப்பாடுகளை பதிவுசெய்து தமக்கான நீதியான தீர்வை பெற்றுக் கொள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழு உதவி செய்து வருகிறது.

அந்த வகையில், பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மீது பொலிஸார் செயற்படாமை, பொலிஸார் பொது மக்களை தாக்குதல் மற்றும் அடித்தல், பொலிஸார் பொது மக்களைத் துன்புறுத்தல், அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்துதல் அல்லது துஸ்பிரயோகம் செய்தல், பக்கச் சார்பாக நடந்து கொள்ளுதல் அல்லது பாரபட்சம் காட்டுதல், சட்டவிரோதமாகக் கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல், பொய்யான குற்றச்சாட்டுக் களைச் சுமத்தி காவலில் வைத்தல், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல், காவலில் இருக்கும் போது துன்புறுத்தல், அதனால் ஏற்படும் இழப்புக்கள், பொலிஸ் அலுவலர் அல்லது பொலிஸ் வாகனம் தொடர்புபட்ட விபத்துக்கள் அல்லது மரணம், பொலிஸ் நடவடிக்கையின் போதான துப்பாக்கிப் பிரயோகம், சட்டத்தை மீறும் பொலிஸாரின் செயற்பாடுகள், விசாரணைக்குத் தேவையான ஆவணங்கள், பதிவேடுகளை தேவையானபோது பார்வையிடவும் பொலிஸ் காவலில் இருக்கும் ஆள்களை சோதனை செய்வதற்கும் அவர்களை விசாரணை செய்வதற்கும் பொலிஸ் அதிகாரிகளை சந்திப்பதற்கும் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்காமல் இருந்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் முறையிடலாம்.

முறைப்பாடு பதிவு செய்யப்படும் பட்சத்தில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை யாழ். மாவட்ட செயலகத்தில் அறை இல. 55 இற்கு நேரடியாகச் சென்று பதிவு செய்து கொள்ள முடியும்.

அல்லது 021 5107722 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## வளிமண்டலத்தில் மாற்றம் நேரப்படலாம்; எச்சரிக்கின்றது திணைக்களம்

கொழும்பு, டிசெ. 05

தெற்கு அந்தமான் தீவு கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேலும் வலுப்பெற்று குறைந்த காற்ற முத்த தாழ்வு மண்டலாமாக உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, குறித்த காற்றமுத்த தாழ்வு பகுதி இன்று 5 ஆம் திகதி மேலும் வலுவடைய வாய்ப்புக்கள் உள்ளன எனவும் இலங்கையைச் சுற்றியுள்ள கடல்பகுதி குறிப்பாக வடக்கு, கிழக்கு, மற்றும் தெற்கு பகுதிகளில் இது உணரப்பட வாய்ப்புகள் உள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்கள எதிர்வு கூறியுள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு: –

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ காணப்படலாம்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகலாம்.

மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசலாம்.

இதனால், பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, தெற்கு அந்தமான் கடல் பகுதியில் உள்ள வலுவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அடுத்த 24 மணி நேரத்திற்கு தமிழகத்தில் ஒருசில இடங்களில் மழையும், ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

வலுவான குறைந்த காற்றமுத்த தாழ்வுப் பகுதி ஞாயிற்றுக்கிழமை முதல் தென் கிழக்கு வங்கக் கடல் மற்றும் அதை ஒட்டியுள்ள தெற்கு அந்தமான் பகுதியிலும் நீடிக்கிறது.

இது அடுத்துவரும் 24 மணி நேரத்தில் காற்ற முத்த தாழ்வு மண்டலமாக வலுப் பெறக்கூடும். எதிர்வரும் 7 ஆம் திகதி வரையிலான காலக்கட்டத்தில் இது வட மேற்கு திசையில் நகர்ந்து, தெற்கு ஆந்திரா, வடதமிழகக் கடற்கரையை நோக்கி நகரக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆறு மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 05

ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண் சரிவு அபாய எச்சரிக்கை மீண்டும் 24 மணித் தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாய எச்சரிக் கையை தொடர்ந்தும் நீடிக்க தேசிய கட்டட ஆய்வு மையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்று காலை 9.30 வரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை யம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, பதுளை ஆகிய மாவட்டங் களிலுள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மலையக பிரதேசங்களில் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மக்கள் எச்ச ரிக்கையுடன் இருக்க வேண்டும் என இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மண்சரிவுகள், கற்பாறை சரிவுகள் மற்றும் மண்மேடு சரிந்து விழும் அபாயங்கள் குறித்து மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்.



மண்சரிவுகள் ஏற்படக்கூடிய காரணிகளை அடையாளம் காணும் பட்சத்தில் அந்த பகுதி களிலுள்ள மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## யாழில் வெசாக் நோன்மதி தின பெரகர நிகழ்வு!



யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் சமாதானத்தின் பின்னர் நாட்டில் ஒரு நல்லிணக்கத்தின் ஊடாக மக்களுடைய வெளிப்பாடு என்னும் கருப்பொருளில் வெசாக் நோன்மதி தின பெரகர நிகழ்வுகள் நேற்று முன்தினம் இரவு யாழ். நாக விகாரையில் நடைபெற்றன.

இந்த பெரகரவுக்கு யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத்தளபதி மேஜர் ஜனரல் தர்சன ஹெட்டியாராச்சி, யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த பெரகரா நிகழ்வு யாழ். பண்ணையில் திறந்த வெளியில் மைதானத்தில் ஆரம்பமாகி அங்கிருந்து ஆஸ்பத்திரிவீதியூடாகபலாலிவீதியை வந்தடைந்து அங்கிருந்து யாழ். நாக விகாரையை சென்றடைந்து நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் யாழ். இந்திய உதவித்துணைத்தூதுவர் ஆர்.நடராஜன் மற்றும் வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித்த பெர்னாண்டோ, பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள், மதத்தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)

காலைக்கதிர் Kalaikkathir



# பதிவு செய்யாத ஓட்டோக்களால் யாழ்ப்பாணத்தில் கலாசாரச் சீரழிவு

## பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு




யாழ்ப்பாண நகரில் பதிவு செய்யப்படாமல்சேவையில்ஈடுபடும் ஓட்டோக்களால் அதிக கட்டணம் அறவிடப்படு வதுடன், கலாசாரச் சீரழிவு களும் இடம்பெறுகின்றன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட் டுள்ளது.

பதிவுசெய்து யாழ்ப்பாணநகரில் சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதி களே நேற்றுப் பிற்பகல் 3 மணி யளவில் இந்த முறைப் பாட்டை வழங்கினர்.

சுமார் 30 ஓட்டோச் சாரதிகள் கூட்டாக இணைந்து வந்து இந்த முறைப்பாட் டைப் பொலிஸ் நிலை யத்தில் வழங்கினர்.


அவர்கள் தமது முறைப்பாட்டில், யாழ்ப்பாண மாநகர சபையில் பதிவு செய்து, சுமார் 900 ஓட்டோக் கள் யாழ்ப்பாண நகரின் மத்தி யிலுள்ள தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபடுகின்றோம். பதிவு செய்யப்பட்ட அனைவரும் நியாய மான – எமது சங்கத்தால் நிர்ண யிக்கப்பட்ட கட்டணத்தில் சேவையில் ஈடுபட்டு வருகின்றோம்.

எனினும் யாழ்ப்பாண மாநகர சபையிலோ அல்லது ஓட்டோச்சாரதி கள் சங்கத்திலோ பதிவு செய்யாமல் 20 பேர் வரையில் யாழ்ப்பாண நகரிலுள்ள தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் அதிகரித்த கட்டணத்தை வாடகைக்கு அமர்த்தியோரிடம் அற விடுகின்றனர்.

அத்துடன், பஸ்களில் வரும் பெண்களை ஏற்றி ஆள்கள் நட மாட்டமற்ற பகுதிகளுக்கு அழைத் துச் செல்கின்றனர். அவர்களால் பாதிக்கப்பட்ட சிலர் எமது சங்கத்தின் மீது பழி போடுகின்றனர்.

இவ்வாறு அடாத்தாகச் சேவை யில் ஈடுபடும் ஓட் டோச் சாரதிகளிடம் தவறு களை நாம் தட்டிக் கேட் டால், தாம் முன்னாள் அமைச்சரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனவும், தம்முடன் முரண்பட்டால் பின் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் எனவும் எம்மை மிரட்டுகின்றனர்.

அவர்களின் அடாத்துகள் தொடர் பில் பலமுறை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடுகள் வழங்கியும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. பொலி ஸாரும் அவர்களுக்கு உடந்தை யாகச் செயற்படு கின்றனரோ எனச் சந்தே கிக்கவேண்டி உள்ளது – என்று கூறினர். (ஐ)




# மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 110 ஆக உயர்வு

## சட்டத்தில் திருத்தம் வருகிறது

நாட்டில் மேல் நீதி மன்ற நீதிபதிகளின் எண் ணிக்கை 75 பேரிலிருந்து 110 பேராக அதிகரிக்க நீதித் துறைச் சட்டத்தில் அரசு திருத்தம் செய்துள்ளது.

நீதித்துறைச்சட்டத்தின் அடிப்படையில் மேல் நீதி மன்ற நீதிபதிகள் 75 பேர் மட்டுமேநாட்டில்சமகாலத் தில்சேவையாற்றமுடியும். அவர்களை நியமிக்கும் அதிகாரம்ஜனாதிபதியிடம் உள்ளது.

இந்த நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் எண் ணிக்கை 110 ஆக அதி கரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேங்கிக் கிடக்கும் லஞ்ச ஊழல் குற் றச்சாட்டுக்கள் உள்ளடங் கிய வழக்குகளை விசா ரிக்க சிறப்பு மேல் நீதிமன் றங்களை ஜனவரியில் அமைக்கவுள்ளதாக நீதி அமைச்சர் தலதா அத்து கோரள தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாடசாலைக்குச் சுற்றுமதில் அமைக்க டெனிஸ் நிதியுதவி



மன்னார், டிசெ.05

மன்னார் – தாழ்வுபாடு புனித வளனார் றோமன் கத்தோலிக்கதமிழ்கலவன் பாடசாலையின் சுற்றுமதில் அமைப்பதற்கு வட மாகாணசபை உறுப்பினர் பா.டெனிஸ்வரனால் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

கடந்த வருடம் குறித்த பாடசாலையின் அதிபர் மற்றும் பாடசாலை சமூகத் தின் அழைப்பின்பேரில் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வுப் போட்டிக்கு முன்னாள் அமைச்சர் பா.டெனிஸ் வரன்விருந்தினராகச்சென் றிருந்தவேளை பாடசா லையின் சுற்றுமதில் அமைப்பதற்கு உதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

அவ்வாக்குறுதிக்கு அமைவாக தனது இவ் வருடத்திற்கான பிரமாண அடிப்படையிலான நன் கொடை நிதியிலிருந்து ஒரு இலட்சத்து 50ஆயிரம் ஒதுக்கீடு செய்து அவ் வேலைகள் முடிவடைந்த நிலையில் அதற்கான காசோலை நேற்று உத் தியோகபூர்வமாக பாடசா லையின் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாட சாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் அருட்சகோதரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

அந்தப் பாடசாலையில் பயிலும் உயர்தர மாண வர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மாகாணசபை உறுப்பின ருக்குத் தெரியப்படுத்தி யிருந்தனர். அதுதொடர்பில் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் அங்கு கூறியிருந்தார்.

# பண மோசடிக் குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 05

வாடகைக்குக் கார்களை வழங்குவதாகக் கூறிப் பல லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற குற் றச்சாட்டில் ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பணத்தில் கொண்டாட்டங்களுக்குக் கார்களை வாடகைக்கு வழங்குவதாகப் பத்திரிகைகளில் விளம் பரங்களை வெளியிட்டு, பலரிடம் பல லட்சம் ரூபா பணத்தைச் சந்தேகநபர் மோசடி செய்துள்ளார் எனப் பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டுள்ளனர். முறைப் பாட்டின் பேரில் முன்னெடுக்கப்பட்ட விசார ணைகளின் அடிப்படையிலேயே சந்தேகநபரைக் கைது செய்தோம் என்று பொலிஸார் கூறினர்.

# ஊர்காவற்றுறை கர்ப்பிணி கொலை; 2 சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 05

ஊர்காவற்றுறைப் பகுதியில்கர்ப்பிணிபெண் கொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேக நபர்கள் இருவரது விளக்கமறி யலை மேலும் நீடித்தது ஊர்காவற்றுறை நீதி வான் நீதிமன்றம்.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறைநீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம். எம்.றியால் முன்னிலை யில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. இதன்போது விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை – கரம் பொன் பகுதியில் குறித்த கர்ப்பிணிப் பெண் வீட்டில் தனித்திருந்தபோது இனந் தெரியாதோரால் கொலை செய்யப்பட்டிருந்தார். இந் தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறைப் பொலி ஸாரால் கைது செய்யப் பட்டுஅவர்களுக்குஎதிராக ஊர்காவற்றுறை நீதி மன்றில் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

நேற்றைய வழக்கு விசாரணையின்போது பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் மன்றில் முன்னி லையான சட்டத்தரணி சுகாஸ், நீதிமன்றில் சமர்ப் பிக்கப்பட்ட சி.சி.ரி.வி. காணொலியானதுஊர்கா வற்றுறையில் உள்ள எரி பொருள் நிரப்பு நிலையத் தில் பெற்றுக்கொள்ளப் பட்ட காணொலியே என மன்றில் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத் தரணி வி.திருக்குமரன், இந்த வழக்கில் சந்தேக நபர்களின் உடையில் காணப்பட்ட இரத்த மாதிரி தொடர்பாகப் பகுப்பாய் வுக்காக அனுப்பட்ட அறிக்கை இன்னும் பொலி ஸாரால் பெற்றுக்கொள் ளப்படவில்லை எனவும், மருதனார்மடம் பகுதியில் எடுக்கப்பட்ட சி.சி.ரி.வி. காணொலியைப் பகுப் பாய்வுக்கு அனுப்புவதில் பொலிஸார் அசண்டையீ னமாகச் செயற்படுகின் றனர் எனவும் மன்றுக்குத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இதற்குப் பதிலளித்த நீதி வான், வித்தியாவழக்கிலும் இரத்தம் உள்ளிட்ட மர பணுப் பரிசோதனை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதில் தாமதிக்கப்பட்ட நிலையில் அதனைப் பரிசோதனை செய்த விஞ்ஞானியைக் கைதுசெய்ய முயற்சித்த போதே வழக்கின் அறிக்கை கிடைக்கப் பெற் றது எனக் குறிப்பிட்டார்.

அடுத்த தவணை யின்போது இரத்தப் பரி சோதனை அறிக்கை தொடர்பாகவும், சி.சி.ரி.வி. காணொலி தொடர்பாகவும் கட்டளை ஒன்றை பிறப் பிப்பதாகத் தெரிவித்த நீதி வான், வழக்கு விசார ணையை எதிர்வரும் 18ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். (ஐ – 7)

# ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு பஷீர் தலைமையில் நேற்று உதயம்



கொழும்பு, டிசெ.05

எதிர்வரும் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதானக் கூட் டமைப்புஎன்னும்அரசியல் கட்சிகூட்டணியமைத்துக் களமிறங்கவுள்ளதாக கட்சியின் செயலாளர் எம்.ரி.ஹசனலி தெரிவித் துள்ளார்.

கட்சிக்கான அங்கீ காரக்கடிதத்தைத்தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப் பிரியவிடமிருந்துநேற்றுத் திங்கட்கிழமை பெற்றுக் கொண்டதன் பின்னரே இந்த அறிவிப்பு வெளி யாகியது.

வண்ணத்துபூச்சின் னத்தில் போட்டியிடும் இந் தக் கட்சியின் தவிசாள ராக பஷீர் சேகு தாவூத் தெரிவு செய்யப்பட்டுள் ளார்.

மறைந்த பெருந் தலைவர் அஷ்ரப்பின் கட்சி யாப்பை அடிப் படையாகக் கொண்டு, ஐக்கிய சமாதானக் கூட் டமைப்பு ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.